# தக்கார் குரல்

உள்ளது உள்ளபடி

TNBIL/25/A2396

மலர் 1 | இதழ் 5 | பிப்ரவரி 2026 | மாத இதழ் | விலை ரூ.25

Volume-1 | Issue 5 | February 2026 | Monthly Magazine | Price RS.25




# முற்றும் மோதல் திணறும் வி.ஐ.பி வேட்பாளர்கள்




## அபாய மணி அடிக்கும் ஆய்வறிக்கை

-நேர்காணல்



# தலைநகரை உலுக்கிய கொலை



YouTube
NDA-கூட்டணி... பாஜக.... இறங்கிவந்துள்ளது
BJP-சர்வே காரணம்
தவெக-வில் வெடிக்கும் மோதல்!!!
சொல்வது ஒன்று.. செய்வது ஒன்றா..?
ஏமாற்றமடைந்த தொண்டர்கள்
புழுகு மூட்டை ஜிகே மணி
ஜி.கே.மணியே அத்தனைக்கும் காரணம்
கொந்தளிக்கும் பாமக நிர்வாகி
குப்பை கிடங்கில் கிடைத்த சடலம்..
சிதைந்த பெண்ணின் உடல்...
பெண்ணின் சடலம் எங்கே? தேடும் பணி தீவிரம்!!
சென்னை நீரில் தத்தளிக்கும்?
பரந்தூர் விமான நிலையம்.. நீர்நிலை
பேராபத்து... எச்சரித்த நிபுணர்?
எச்சரித்த நிபுணர் ?
என் தொகுதியை வலம் வந்து பாருங்கள்!!
TVKவில் இருந்து இளைஞர்கள்...
திமுகவிற்கு திரும்புவார்கள்..
திமுகவுக்கு போட்டியா?
செய்தியாளரை தாக்கிய மணல் மாஃபியா!!
கரூரில் திமுக MLA அராஜகம்?
திமுக எம்எல்ஏ பழனியாண்டி அராஜகம்
SIR வேண்டாம் SSR வேண்டும்
கொந்தளிக்கும் தமிமுன் அன்சாரி
தமிமுன் அன்சாரியின் அசத்தல் பேட்டி
@PHONE APP
@WEBSITE
@YOUTUBE
@INSTAGRAM

தக்கார்

வெளியீட்டாளர் - ஆசிரியர்
**S.யூசுப் பாஷா**

வழிகாட்டுதல் குழு
**ஜோதிமணி,** மேனாள் நீதியரசர் உயர் நீதிமன்றம்
**ராஜதுரை**, மூத்த பத்திரிகையாளர்
**கே.ராஜேந்திர பிரபு,**
மூத்த பத்திரிகையாளர்
**ஆஷிஸ்**, சட்ட ஆலோசகர்

பொறுப்பாசிரியர் **S.சஞ்சய்காந்தி**
உதவி ஆசிரியர்கள்
**விஜயலட்சுமி பின்லாந்து**
**ஜோதி நரசிம்மன், S.சக்தி பாரதி**
சென்னை நிருபர்கள்
தலைமை நிருபர் **பாலாஜி**
தலைமை புகைப்பட கலைஞர் **சதீஷ்**
மாவட்ட நிருபர்கள்
சென்னை - **M.ஹர்ஷத்**
உயர் நீதிமன்றம் **க.முகேஷ்**
மாவட்ட செய்தியாளர்கள்
புதுச்சேரி - **ஏ.கே.ஆர்**
காஞ்சிபுரம்- **கவி பாலா,**
**ராஜா** புகைப்படக்கலைஞர்
இராணிப்பேட்டை - **ராஜீவ்**
மதுரை - **கோபி கிருஷ்ணன்**
கொடைக்கானல் - **கணேசன்**
திருச்சி - **புவனேஸ்வரி**
கோவை - **அருண் சங்கீத்**
ராமநாதபுரம் - **கவின்**
போடி - **விஜய்**
இணையதள ஆசிரியர்- **தீப்நாத்**
விஷுவல் எடிட்டர் - **E.காலித்**
டிஜிட்டல் மார்க்கெட்டிங் - **யுகேந்திரன்**

வடிவமைப்பு
**பாரதி டிசைனர்ஸ்,**
மதுரை

மின்னஞ்சல்
thakkaarkural@gmail.com
Cell: 75500 50088
செய்திகளை உடனுக்குடன் அறிய உங்கள் போனில்
ThakkaarKural App-ஐ டவுன்லோடு செய்யுங்கள்
இணையதள முகவரி
www.thakkaarkural.com

# பிரச்சாரத்தை தொடங்கியது NDA

ஜன.23ம் தேதி மதுராந்தகத்தில் நடந்த NDA பொதுக்கூட்டம் மூலம், அதிமுக-பாஜக கூட்டணியின் தேர்தல் பிரச்சாரத்தை தொடங்கி வைத்தார் பிரதமர் மோடி. யாரும் எதிர்பாராத வகையில் NDA-வில் இணைந்தார் டிடிவி தினகரன். தனக்கும், எடப்பாடி பழனிசாமிக்குமானது பங்காளி சண்டைதான் என பிரச்சினைக்கு சுப முடிவு கண்டார். கூட்டணியில் கூடுதலாக அன்புமணி தலைமையிலான பாமக இணைந்தது. இதன்மூலம் NDA-வின் செயல்பாடுகள் வேகம் பெறத் தொடங்கிவிட்டன.

மறுபக்கம் திமுக - காங்கிரஸ் இடையே முறுகல் நிலை நீடிக்கிறது. இரண்டாம் கட்ட தலைவர்கள் மாறி மாறி வசைபாடிக் கொண்டது பரபரப்பை ஏற்படுத்தியது. கூட்டணி உடைந்துவிடுமோ என ஆரூடங்கள் கூறப்பட்ட நிலையில், டெல்லியில் ராகுல் காந்தியை சந்தித்துப் பேசினார் கனிமொழி. இருதரப்பிலும் பேச்சுவார்த்தை விவரங்கள் தெரிவிக்கப்படவில்லை.

தற்போதைய நிலை வரை, கூட்டணியை உடைக்கும் எண்ணம் காங்கிரஸுக்கு இல்லை, விஜய் வரவை காரணம் காட்டி தனது சீட் பேரத்தை காங்கிரஸ் தீவிரப்படுத்தியிருப்பதாகவே பார்க்கப்படுகிறது. ஆனால் நிலைமை எப்படி வேண்டுமானாலும் மாறலாம் என நம்மிடம் தெரிவித்தார் ஒரு மூத்த காங்கிரஸ் எம்.பி. இதன்மூலம், இருதரப்புக்கும் இடையே பரஸ்பர நம்பிக்கையின்மை ஏற்பட்டுள்ளது தெளிவாகிறது.

ஆனால், பாஜக எதிர்ப்பு என்ற ஒற்றைப் புள்ளி, திமுக கூட்டணியை தொடர்ந்து கட்டுக்கோப்பாக தேர்தலுக்குள் கொண்டு சென்றுவிடும் என திமுக தலைமை நம்புகிறது. இதில் சங்கடங்கள் ஏற்பட்டாலும், மாற்று திட்டத்துடன் திமுக தயாராக இருப்பதாகவே செய்திகள் வருகின்றன. ஆக, NDA பக்கம் காணப்படும் உற்சாகம், திமுக தரப்பில் தென்படவில்லை. எனினும், இதுவே இறுதியானது இல்லை. அரசியலில் ஒருநாள் என்பதே மிகப்பெரிய கால அவகாசம் என்பதால், கூட்டணி கணக்குகளில் தெளிவு பிறக்க மேலும் சில வாரங்கள் பிடிக்கலாம். ஆனால், பிப்ரவரி முடிவில் காட்சிகள் தெளிவாகிவிடும். காங்கிரஸின் முடிவுக்காகவே தேமுதிக, பாமக (ராமதாஸ் பிரிவு), ஓபிஎஸ் ஆகியோர் காத்திருக்கின்றனர்.

இதில், யாரும் இல்லாமல் தனிமையில் நிற்பது தவெகதான். திமுக, அதிமுக, பாஜக என அனைவரையும் எதிர்க்கிறது இந்த கட்சி. ஒரு தேர்தலில் மூன்று முயல்களை வேட்டையாடப் பார்க்கிறது. இது சாத்தியமாகுமா? அதன் தொண்டர்களோ, தலைமையோ கூட்டணியின் தேவையை உணர்ந்ததாக தெரியவில்லை. தவெக தலைமையின் பேச்சும், அணுகுமுறையும் அவரை ஒரு சீரியஸான அரசியல்வாதியாக காட்டவில்லை. அதுசரி, போருக்கு போகிறவர்களுக்குத்தானே கூட்டணி தேவை, பயிற்சிக்கு அவசியமில்லையே!

– ஆசிரியர்

# 2026 தேர்தல் திருவிழா

# வி.ஐ.பி. தொகுதிகள்

## ஒரு பார்வை

**ஜோதி நரசிம்மன்**

களைகட்டிவிட்டது தமிழக சட்டமன்ற பொதுத் தேர்தல். இம்மாத இறுதியிலோ அல்லது மார்ச் முதல் வாரத்திலோ தேர்தல் தேதியை தேர்தல் ஆணையம் அறிவிக்கக் கூடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. பெரும் எதிர்பார்ப்புகளுக்கிடையே பல்வேறு கட்சிகளும் மிக ஆர்வத்துடன் களத்தில் இறங்கியுள்ளன. ஜனநாயகத் திருவிழா களைகட்டிவிட்டது. கூட்டணிகளுக்கு இறுதிவடிவம் தரும் பணி விறுவிறுப்பாக நடைபெற்று வருகிறது. இந்நிலையில், அடுத்த ஐந்தாண்டுகளுக்கு தமிழகத்தின் தலையெழுத்தை, தமிழகத்தின் போக்கை தீர்மானிக்கப் போகும் தேர்தலை அலச ஒரு வாய்ப்பு நமக்கு கிடைத்துள்ளது. அதன் ஒரு பகுதியாக, தமிழகத்தின் விஜபி சட்டமன்ற தொகுதிகள் குறித்து அலசுகிறது இந்த பகுதி.



## விழுப்புரம்

விழுப்புரம் சட்டமன்ற தொகுதியில் முன்பு ஒருமுறை சுயேட்சையும், ஒருமுறை காங்கிரஸ் கட்சியும் வென்றுள்ளன. அதற்குப் பிறகு திமுக, அதிமுகவை தவிர வேறு எந்த கட்சியும் இங்கு காலூன்ற முடியவில்லை. பொன்முடி, சிவி சண்முகம், ஜனார்த்தனன் என முன்னாள் அமைச்சர்கள் வெற்றி பெற்ற இந்த தொகுதியில் கடைசியாக நடைபெற்ற 2021 தேர்தலில் அப்போதைய அமைச்சர் சிவி சண்முகம் தோல்வியடைந்தார். பிறகு மாநிலங்களவைக்கு அவர் தேர்வு செய்யப்பட்டார்.

சிவி சண்முகத்திடம் எப்படியும் தோல்வியை சந்திப்பார் என கருதி, அதிமுகவிலிருந்து திமுகவிற்கு வந்த லட்சுமணனுக்கு சீட்டு வழங்கினார் பொன்முடி. அது தப்புக் கணக்கு ஆனது. சிவி சண்முகத்தை எதிர்த்து போட்டியிட்ட லட்சுமணனுக்கு பொன்முடியின் எதிர்ப்பு வாக்குகளும், அதிமுகவில் சிவி சண்முகத்திற்கு எதிரான வாக்குகளும், திமுக வாக்குகளும் இணைந்து லட்சுமணனை வெற்றி பெறச் செய்தது.



சி.வி.சண்முகம்

அதேவேளையில் பொன்முடியின் பதவி பறிபோனது. மாவட்டத்தை மூன்றாகப் பிரித்து ஒரு பகுதிக்கு லட்சுமணனை மாவட்ட செயலாளராக அறிவித்தது போன்ற நிகழ்வுகளும் நடந்தன. இவை அனைத்தும் லட்சுமணனுக்கு சாதகமாக இருந்தாலும், பொன்முடியின் படம் தவிர்த்த பேனர்களை பயன்படுத்துவது, பொன்முடி நிகழ்ச்சிகளில் பங்கேற்காமல் புறக்கணிப்பது, பொன்முடியை அழைக்காமல் இருப்பது போன்ற நடவடிக்கைகளில் லட்சுமணன் தரப்பு ஈடுபட்டது. ஒரு கட்டத்தில் அமைச்சர் எம் ஆர் கே பன்னீர்செல்வம் நேரடியாகவே நிர்வாகிகள் கூட்டத்தில் பொன்முடி தவிர்க்கப்படும் நிகழ்வை கண்டித்தார்.



லட்சுமணன்

இந்த தொகுதியில் அதிமுக சார்பில் பசுபதி போட்டியிட வாய்ப்பு அதிகம். பசுபதி இதற்கு முன்னர் பாமக, அதிமுக என மாறிமாறி விழுப்புரம் தொகுதியில் போட்டியிட்டவர் என்பது குறிப்பிடத்தக்கது. இல்லையென்றால் பெண் கவுன்சிலர் ராதிகா நிறுத்தப்படலாம். சிவி சண்முகம் சார்பில் விழுப்புரத்தில் நீதிமன்றத்தில் ஆஜராகும் வழக்கறிஞரான அவருக்கு தொகுதி ஒதுக்கப்படலாம் எனவும் பரவலாக பேசப்படுகிறது.



பொன்முடி

ஆக, விழுப்புரம் தொகுதியில் அதிமுக - திமுக இடையே மட்டுமல்லாமல், சொந்த கட்சி தலைவர்களிடையேயும் போட்டி கடுமையாகவே உள்ளது.

## விராலிமலை



சி.விஜயபாஸ்கர்

விராலிமலை சட்டமன்ற தொகுதி பெரும்பாலும் அதிமுக வசம்தான் இருந்துள்ளது. இதன் தற்போதைய சட்டமன்ற உறுப்பினர் அதிமுக முன்னாள் அமைச்சர் சி.விஜயபாஸ்கர். இவர் கடந்த 3 தேர்தலாக அதிமுக சார்பில் இதே தொகுதியில் போட்டியிட்டு அதிக வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றவர். மக்கள் மத்தியில் இயல்பான செல்வாக்கு பெற்றவராக இவர் விளங்குகிறார்.

ஒருமுறை திமுக சார்பில் போட்டியிட்ட எஸ்.ரகுபதியையும் மற்ற 2 முறை

பழனியப்பனையும் வென்றவர் விஜயபாஸ்கர். அவரை வீழ்த்த திமுக எந்த வியூகம் வகுத்தாலும் வீழ்த்த முடியாத அளவிற்கு மக்கள் செல்வாக்கு பெற்றவர் விஜயபாஸ்கர். அதிமுகவின் முன்னணி தலைவர்களில் ஒருவர். இந்த முறை மீண்டும் தோல்வியடைய திமுக விரும்பாது எனவே கூட்டணி கட்சிக்கு இந்த தொகுதி ஒதுக்கப்படலாம் என தெரிகிறது. இருந்தாலும் இந்த தொகுதியில் மீண்டும் விஜயபாஸ்கருக்கு தான் வாய்ப்பு என்கின்றனர் அதிமுகவினர்.

### பென்னாகரம்


தமிழ்நாடு உழைப்பாளர் கட்சி தொடங்கி ஜனதா கட்சி உட்பட பாட்டாளி மக்கள் கட்சி, காங்கிரஸ், திமுக என அனைத்து கட்சிகளும் வெற்றி பெற்ற ஒரு முக்கியமான தொகுதிதான் பென்னாகரம். இதன் தற்போதைய சட்டமன்ற உறுப்பினர் பாட்டாளி மக்கள் கட்சியின் கௌரவ தலைவர் ஜிகே மணி.


ஜி.கே.மணி

பென்னாகரம் தொகுதி வன்னியர்கள் நிறைந்த தொகுதி. பாமக செல்வாக்கு பெற்ற தொகுதிகளில் ஒன்று பென்னாகரம். கடந்த தேர்தலில் ஜிகே மணி 1,06,123 வாக்குகளைப் பெற்றார். அவரை எதிர்த்துப் போட்டி யிட்ட திமுக வேட்பாளர் இன்பசேகரன் 84,937 வாக்குகளைப் பெற்று தோல்வியுற்றார். இந்த முறை திமுக இங்கு வெற்றி பெறக்கூடும் என்கிறார். காரணம் பாமகவில் ஏற்பட்டுள்ள விரிசல்தான். பாமக ஒன்றாக இருந்தால் ஜிகே. மணி போட்டியிடுவார். பிரிந்து இருப்பதால் வாய்ப்பு கொடுத்தாலும் கூட ஜிகே. மணி போட்டியிட மறுத்து விடுவார் என்கிறார்கள். பாமகவின் விரிசல் திமுகவுக்கு சாதகம் என்பதே தற்போதைய நிலை.

### திருவெற்றியூர்

தமிழக முழுவதும் 234 தொகுதிகளிலும் போட்டியிட்ட கட்சி நாம் தமிழர் கட்சி. அக்கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் கடந்த தேர்தலில் இந்த தொகுதியில் போட்டியிட்டார். திமுக சார்பில் கேபி. சங்கர் 88,185 வாக்குகளும், அதிமுக சார்பில் போட்டியிட்ட வேட்பாளர் கே.குப்பன் 50,524 வாக்குகளும், சீமான் 48,597 வாக்குகளும் பெற்றனர்.


சீமான்

இங்கு சீமான் மீண்டும் களமிறங்குவாரா? என்பது சந்தேகம்தான் என்கிறார்கள் அக்கட்சியினர். காரணம், ஏற்கெனவே பெற்ற வாக்குகளைவிட இம்முறை பெறும் வாக்குகள் குறைந்து விடக்கூடாது என்பதால் சீமான் இந்தத் தொகுதியை தவிர்க்கக்கூடும் என்கிறார்கள். இங்கு, திமுகவிற்கு நல்ல பெயர் இருந்தாலும் இந்த தேர்தலில் மாற்றி வாக்களிக்கலாம் என்கிற மனநிலையில் தொகுதி மக்கள் இருப்பதால், அதிமுகவுக்கே வாய்ப்பு என்கிறார்கள் தொகுதிவாசிகள்.

### ஸ்ரீபெரும்புதூர்

முன்னாள் பிரதமர் ராஜிவ் காந்தி தேர்தல் பிரச்சாரத்தின்போது படுகொலை செய்யப்பட்ட இடம் ஸ்ரீபெரும்புதூர். எந்த கூட்டணியில் இருந்தாலும் இந்த தொகுதி காங்கிரஸ் கட்சிக்கே ஒதுக்கப்பட்டு வருகிறது. பெரும்பாலும் இந்த தொகுதியில் காங்கிரஸ் கட்சியே வெற்றிபெற்று வருகிறது. கடந்த தேர்தலில் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தலைவர் கு.செல்வப்பெருந்தகை வெற்றி பெற்றார்.



செல்வப்பெருந்தகை

செல்வப்பெருந்தகை தனது அரசியல் வாழ்க்கையை பூவை மூர்த்தி தலைமையிலான புரட்சி பாரதம் கட்சியில் தொடங்கினார். பின்பு அதிலிருந்து விலகி கிருஷ்ணசாமி தலைமையிலான புதிய தமிழகம் கட்சியில் இணைந்தார். அதன் பின்பு திருமாவளவன் தலைமையிலான விடுதலைச் சிறுத்தைகள் கட்சியில் இணைந்து, அக்கட்சி சார்பாக 2006ம் ஆண்டு தமிழக சட்டசபை தேர்தலில் மங்களூர் தொகுதியில் போட்டியிட்டு வெற்றிபெற்றார்.

அதன்பிறகு திருமாவளவன் உடன் ஏற்பட்ட கருத்து வேறுபாடு காரணமாக விடுதலைச் சிறுத்தைகள் கட்சியில் இருந்து விலகி பிறகு 2008ம் ஆண்டு பகுஜன் சமாஜ் கட்சியில் இணைந்து, அக்கட்சியின் மாநில தலைவரானார். பின்பு அக்கட்சியில் இருந்து விலகி 2010ம் ஆண்டு தமிழ்நாடு காங்கிரஸ் கட்சியில் இணைந்தார். அதன் பிறகு 2011 ஆம் ஆண்டு செங்கம் சட்டமன்றத் தொகுதியிலும், 2016ம் ஆண்டு ஸ்ரீபெரும்புதூர் சட்டமன்றத் தொகுதியிலும் போட்டியிட்டு தோல்வியடைந்தார். தொடர்ந்து 2021 தேர்தலில் மீண்டும் ஸ்ரீபெரும்புதூர் தொகுதியில் வென்று, காங்கிரஸ் கட்சியின் சட்டமன்றக் குழு தலைவரானார்.

செல்வப்பெருந்தகை கடந்த சட்டமன்றத் தேர்தலில் 1,15,353 வாக்குகளைப் பெற்றார். அவரை எதிர்த்துப் போட்டியிட்ட அதிமுக வேட்பாளர் பழனி 104,474 வாக்குகளைப் பெற்று தோல்வியடைந்தார். காங்கிரஸ் கட்சி மீது அந்த தொகுதி மக்களுக்கு மரியாதை இருந்தாலும், செல்வப்பெருந்தகையை மீண்டும் களமிறக்கினால் காங்கிரஸ் வெல்வது சிரமம்தான் என்கிறார்கள். அதிமுக சரியான வேட்பாளரை நிறுத்தினால் மீண்டும் வெற்றிபெற வாய்ப்பிருப்பதாகவே கருதப்படுகிறது

### திருநெல்வேலி

2001 சட்டமன்றத் தேர்தலில், திருநெல்வேலி தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டார் நயினார் நாகேந்திரன். 2011 சட்டமன்றத் தேர்தலில் மீண்டும் சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். 20012006 வரை நடைபெற்ற அதிமுக ஆட்சியில் மின்சாரத்துறை அமைச்சராகவும், தொழில்துறை அமைச்சராகவும் பணியாற்றினார். 2016 தேர்தலில், திமுக வேட்பாளர் அ.இல.சு.இலட்சுமணன் என்பவரிடம் 601 வாக்குகளில் தோல்வியடைந்தார். அதே, இலட்சுமணனை 2021 தேர்தலில் வீழ்த்தினார். ஆனால், இம்முறை பாஜக சார்பில் போட்டியிட்டார் என்பது குறிப்பிடத்தக்கது. வரும் தேர்தலில், பாஜகவின் மாநில தலைவராக அவர் களம்காணும்போது கூடுதல் பலத்துடன் போட்டியிடுவார். அதிமுக கூட்டணி பெரும் பலம் சேர்க்கக்கூடும். இதனால் நெல்லையில் அனல் பறக்கப்போவது உறுதி.



நயினார் நாகேந்திரன்

## ராதாபுரம்

சட்டமன்ற சபாநாயகர் அப்பாவு போட்டியிட்ட தொகுதி. இங்கு அப்பாவுக்கு செல்வாக்கு இருந்தாலும், எதிர்கட்சிகள் இணைந்து பலமான கூட்டணி அமைத்திருப்பதால் அவருக்கு பெரும் சவால் காத்திருக்கிறது.



அப்பாவு

கடந்த முறை தேர்தலில் அப்பாவு 82,331 வாக்குகள் பெற்று வெற்றி பெற்றார் அவரை எதிர்த்துப் போட்டியிட்ட அதிமுகவை சேர்ந்த இன்பதுரை 76,406 வாக்குகள் பெற்று தோல்வியடைந்தார். தமிழ் மாநில காங்கிரஸ், சுயேச்சை, திமுக என எந்த கட்சியில் இருந்தாலும் அதிக வெற்றிகளை பதிவு செய்தவர் என்பது அவருக்கு இருக்கும் பலம். எனினும் 2016ல் அவரை வீழ்த்திய இன்பதுரையே மீண்டும் களமிறங்கினால் போட்டி கடுமையாகவே இருக்கும்.

## மதுரை மத்திய தொகுதி

திமுக முன்னோடிகளில் ஒருவரான பிடிஆர். பழனிவேல் ராஜனின் மகன் தியாகராஜனின் தொகுதி. இந்த தொகுதியில் 1980ல் திமுக சார்பில் போட்டியிட்ட பிடிஆர்.ஐ, சுயேச்சையாக போட்டியிட்ட பழ.நெடுமாறன் வீழ்த்திய வரலாறு இந்த தொகுதிக்கு உண்டு.



பழனிவேல் தியாகராஜன்

அமைச்சர் பழனிவேல் தியாகராஜனை திமுகவில் சிலருக்கு பிடிக்கவில்லை என்பது வேறு கதை. அதற்காக மீண்டும் அவர் போட்டியிட அந்த தொகுதியை தர மறுப்பார்கள் என்று சொல்ல முடியாது. அப்படி மீண்டும் அந்த தொகுதி அவருக்கு வழங்கப்பட்டால் மீண்டும் திமுகவிற்கு வெற்றிதான் என்கிறார்கள். கடந்த முறை நடைபெற்ற தேர்தலில் பழனிவேல் தியாகராஜன் 73,205 வாக்குகளை பெற்றார் அவரை எதிர்த்துப் போட்டியிட்ட அதிமுக கூட்டணி வேட்பாளர் ஜோதி முத்துராமலிங்கம் 39,029 வாக்குகளைப் பெற்று தோல்வியடைந்தார்.

## திருப்பத்தூர்

சிவகங்கை சீமையின் முக்கிய தொகுதி திருப்பத்தூர். இங்கு, திமுக சார்பில் தொடர்ந்து நிறுத்தப்பட்டுபவர் பெரியகருப்பன். அமைச்சராகவும் உள்ளார். இந்த தொகுதியில் கடந்த 20 ஆண்டுகளாக இவர்தான் சட்டமன்ற உறுப்பினராக இருந்து வருகிறார். 4 முறையும் அதிமுகவையே அவர் தோற்கடித்துள்ளார்.



பெரியகருப்பன்

இப்போது திமுகவில் அமைச்சராக இருக்கின்ற ராஜகண்ணப்பன் அதிமுகவில் இருக்கும்போது பெரியகருப்பனை எதிர்த்துப் போட்டியிட்டு தோல்வியடைந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. பெரியகருப்பன் மீது ஆபாச வீடியோ குற்றச்சாட்டு எழுந்தபோதும், அதிக வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெற்று தன்மீதான தொகுதி மக்களின் நம்பிக்கையை நிரூபித்தார். கடந்த தேர்தலில் இவர், 1,03,682 வாக்குகள் பெற்ற நிலையில், இவரை எதிர்த்துப் போட்டியிட்ட அதிமுக வேட்பாளர் மருது அழகுராஜ் 66,308 வாக்குகளைப் பெற்று தோல்வியடைந்தார். திருப்பத்தூர் திமுகவின் கோட்டை என்கிறார்கள் உடன்பிறப்புகள்.

## கொளத்தூர்

கடந்த 2011 ஆம் ஆண்டு புதிதாக உருவாக்கப்பட்ட தொகுதி. தமிழகத்தின் அதிமுக்கியத்துவம் வாய்ந்த தொகுதி கொளத்தூர். காரணம் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் 3 முறை போட்டியிட்டு வெற்றி பெற்ற தொகுதி. 2021 இல் அந்த தொகுதியில் போட்டியிட்ட தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் 105,522 வாக்குகள் பெற்றார். அவரை எதிர்த்துப் போட்டியிட்ட அதிமுக வேட்பாளர் ஆதி ராஜாராம் 35,138 வாக்குகளை மட்டுமே பெற்றார். இதன்மூலம், 70,384 வாக்குகள் வித்தியாசத்தில் ஸ்டாலின் வெற்றிபெற்றார்.



மு.க.ஸ்டாலின்

இந்த முறை அதிமுக ஒரு வலுவான கூட்டணி அமைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. எனினும், கூட்டணி பலம் எப்படி இருந்தாலும், அது போட்டியை வேண்டுமானால் தரலாமே தவிர, ஸ்டாலினுக்கு சவாலாக அமையாது என்கிறார்கள். காரணம் ஸ்டாலினுக்கு என்று தனி செல்வாக்கு அந்த தொகுதியில் உண்டு. எனவே யார் எதிர்த்து போட்டியிட்டாலும், தொகுதி மக்களால் வெற்றி வேட்பாளராகவே பார்க்கப்படுகிறார் முதல்வர் ஸ்டாலின்.

## எடப்பாடி

முன்னாள் முதல்வரும், அதிமுக தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணியின் முதல்வர் வேட்பாளருமான எடப்பாடி கே.பழனிசாமியின் தொகுதி. பாரம்பரியமாகவே இது அதிமுகவின் கோட்டையாகும். பெரும்பாலும் அதிமுகவும், பாமகவும் தான் இங்கு அதிகம் வெற்றி பெற்றுவந்துள்ளன. 1989 முதல் எடப்பாடி பழனிச்சாமி 5 முறை வெற்றி பெற்ற தொகுதி. தொடர்ந்து இந்த தொகுதியில் தான் எடப்பாடி பழனிசாமி போட்டியிட்டு வருகிறார். கடந்த முறை இந்த தொகுதியில் எடப்பாடி பழனிசாமி போட்டியிட்டபோது 1,63,154 வாக்குகள் பெற்றார் அவரை எதிர்த்துப் போட்டியிட்ட திமுக வேட்பாளர் சம்பத்குமார் 69,352 வாக்குகளை மட்டுமே பெற முடிந்தது. சுமார் 94 ஆயிரம் வாக்குகள் வித்தியாசத்தில் எடப்பாடி பழனிச்சாமி வெற்றி பெற்றார்.



பழனிசாமி

தொகுதிக்குள் தனிப்பட்ட செல்வாக்கு மிக்கவரான எடப்பாடி பழனிசாமியே இம்முறையும் களமிறங்குவார் என்பதால், போட்டி கடுமையாக இல்லை. அவரை எதிர்த்து, கொங்கு வேளாளர் சமூகத்தைச் சேர்ந்த செல்வாக்கு மிக்க ஒருவரை களமிறக்கலாம் என திமுக திட்டமிடுவதாக தெரிகிறது. அதேநேரம், பாமக இருப்பது இப்பகுதியில் அதிமுக கூட்டணிக்கு பெரும் பலமாக உள்ளது.



## சேப்பாக்கம்-திருவல்லிக்கேணி

திமுகவின் கோட்டை இந்த தொகுதி. தற்போதைய சட்டமன்ற உறுப்பினர் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின். இவர் போட்டியிட போகிறார் என்று தெரிந்தவுடன், அதிமுக, கூட்டணி கட்சிக்கு இந்த தொகுதியை ஒதுக்கிவிட்டு ஒதுங்கிக் கொண்டது என்றே சொல்லலாம்.

அந்த தேர்தலில் உதயநிதி ஸ்டாலின் 93,285 வாக்குகள் பெற்றார். அவரை எதிர்த்து நின்ற பாமக வேட்பாளர் ஏ. வி. ஏ. கஸ்ஸாலி 23,930 வாக்குகளை தான் பெற்றார். மீண்டும் இதே தொகுதியில் உதயநிதி ஸ்டாலின் போட்டியிட்டால் அவரை எதிர்த்து களம் காணப்போவது அதிமுக, விஜய் கட்சியில் இருந்து யாரோ ஒருவர் தான். விஜய் கட்சியால் இங்கு வெல்ல முடியுமா என்பது சந்தேகம்தான். ஆனால், விஜயின் வரலாறு, இங்கு உதயநிதி ஸ்டாலினின் வாக்கு சதவீதம் குறைவது உறுதி. அதிமுக சரியான வேட்பாளரை நிறுத்தினால் திமுகவுக்கு சவால் விடலாம் என்கிறார்கள்.



உதயநிதி

திமுக மக்களுக்கு வழங்கிய சலுகைகள் தங்களை வெற்றி பெற செய்யும் என்று நம்பி இருந்தாலும், பலன் கிடைக்காதவர்களின் வாக்குகள் எதிராக திரும்பும் ஆபத்தும் உள்ளது. ஆனால், இங்கு, அரசின் நலத்திட்டங்கள் அனைத்தும் நூறு சதவீதம் பெரும்பாலான வாக்காளர்களுக்கு சென்று சேர்ந்துள்ளதாக அடித்துக் கூறுகிறார்கள் உடன்பிறப்புகள். உதயநிதியின் தொகுதி என்பதால் அந்த அளவுக்கு வேலை பார்த்திருக்கிறார்கள். அதிமுக கூட்டணியில் பாஜக இடம்பெறுவதால் சிறுபான்மையினர் வாக்குகள் சிந்தாமல் சிதறாமல் திமுக பக்கம் போவது உறுதி. இங்கு விஜய் கட்சி தீவிரம் காட்டினால் போட்டி கடுமையாகவே இருக்கும்.

## அரவக்குறிச்சி

பாஜகவின் முன்னாள் மாநிலத் தலைவர் அண்ணாமலை இங்கு மீண்டும் போட்டியிட்டால் எதிர்கொள்ள தயாராக இருக்கிறது திமுக. கடந்த முறை அரவக்குறிச்சி சட்டமன்ற தொகுதியில் போட்டியிட்ட அண்ணாமலை 68,553 வாக்குகளைதான் பெற முடிந்தது. அவரை எதிர்த்துப் போட்டியிட்ட திமுக வேட்பாளர் இளங்கோ 93,369 வாக்குகளைப் பெற்று வெற்றி பெற்றார்.



அண்ணாமலை

அரவக்குறிச்சியை பொறுத்தவரை அண்ணாமலை ஜாதி பலத்தை நம்பி இருக்க முடியாது. காரணம் திமுகவும் அதே ஜாதியில் ஒருவரை நிறுத்தி களம் காணும். அதநேரம் அண்ணாமலைக்கு தொண்டர்கள் மத்தியில் செல்வாக்கு இருந்தாலும், உள்கட்சி தலைவர்கள் அவருக்கு எதிராக உள்ளடி வேலையில் ஈடுபடக்கூடும். மறுபுறம் அண்ணாமலையை பழிதீர்க்க திமுக தயாராகி வருகிறது. கடந்த காலத்தில் திமுகவுக்கு எதிராக அண்ணாமலை காட்டிய வேகம் அத்தகையது. இந்த தேர்தலில் திமுக யாரை நிறுத்தினாலும் அண்ணாமலை பெரும் சவால் காத்திருப்பது உறுதி.

### பண்ருட்டி

பலாச் சுவை என்றாலே நினைவுக்கு வருவது பண்ருட்டி. பாரம்பரிய மிக்க தொகுதி ஆகும். தமிழ்நாடு உழைப்பாளர் கட்சி தொடங்கி பெரும்பாலும் அங்கு வன்னியர் சமூகத்தைச் சேர்ந்தவர்கள்தான் சட்டமன்ற உறுப்பினராக நீடித்து வருகிறார்கள். போட்டியும் வன்னியர்களுக்கு இடையே தான் இருந்து வருகிறது.



வேல்முருகன்

அந்த வகையில் தற்போதைய சட்டமன்ற உறுப்பினராக தமிழக வாழ்வுரிமைக் கட்சியின் தலைவர் வேல்முருகன் இருந்து வருகிறார். அவர் திமுக உறுப்பினராக தான் தற்போது சட்டமன்றத்தில் நுழைந்துள்ளார். ஏனென்றால் அவர் திமுகவின் உதயசூரியன் சின்னத்தில் தான் போட்டி யிட்டார். ஆனால், இந்த முறை மீண்டும் பண்ருட்டி தொகுதியில் போட்டி யிட்டால், சொந்த கட்சியின் சார்பில் தான் போட்டியிடுவார் வேல்முருகன் என்கின்றனர் அவரது கட்சியினர். அப்படி ஒரு நிலை ஏற்படும்பட்சத்தில், அவரை எதிர்த்து அதிமுகவோ, பிரபலமான வேறு கட்சியோ களமிறங்கினால் வேல்முருகனின் வெற்றி வாய்ப்பு கேள்விக்குறியாகும். திருமாவளவனின் ஆதரவு இருப்பதால் தலித் வாக்குகள் சிந்தாமல் சிதறாமல் வேல்முருகனுக்கு கிடைக்கும். வன்னியர் தலைவர்களிலேயே தலித் ஆதரவு பெற்ற தலைவர் என்பது வேல்முருகனின் அடையாளம். அதனால் இந்த தேர்தலிலும் களமிறங்க மிகுந்த ஆர்வத்துடன் காத்திருக்கிறார் வேல்முருகன்.

### கரூர்

தமிழகத்தில் மிகவும் பிரபலமான தொகுதி கரூர். கரூர் சட்டமன்ற தொகுதியால் செந்தில் பாலாஜி பிரபலமா? அல்லது செந்தில் பாலாஜியால் கரூர் பிரபலமா? என்கிற அளவுக்கு தொகுதிக்குள் வானுயர இருக்கிறது அவரது செல்வாக்கு.



செந்தில் பாலாஜி

அதிமுக, திமுக என எந்தக் கட்சி ஆனாலும் அதை தனது சொந்த கட்சிபோல ஆக்கிக் கொள்ளும் வல்லமை படைத்தவர் செந்தில் பாலாஜி. கரூர் தொகுதியில் 2 முறை அதிமுக சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்ற செந்தில் பாலாஜியை எதிர்த்து கடந்த முறை அதிமுக வேட்பாளர் எம். ஆர். விஜயபாஸ்கர் போட்டியிட்டார். அதிக ஓட்டு வித்தியாசத்தில் வெற்றி பெற விட்டாலும், தொகுதியை தன்வசம் ஆக்கிக் கொண்டார் செந்தில் பாலாஜி.

வேறு ஒருவர் போட்டிடும் இடைத்தேர்தலில் எந்த அளவிற்கு செலவு செய்கிறாரோ, அதைவிட கூடுதல் செலவு செய்துதான் தொகுதியை தக்க வைத்துக் கொண்டார் என்ற விமர்சனமும் உண்டு. அதேபோன்று இந்த முறை தேர்தலிலும் எதிர்த்து யார் போட்டியிட்டாலும், தன் பக்கம் வெற்றி வாய்ப்புக்கு எவ்வளவு செலவு செய்யவும் செந்தில் பாலாஜி தயாராக இருப்பார் என்கிறார்கள். அவரை எதிர்த்துப் போட்டி யிடுகின்றவர் அவர் அளவிற்கு இல்லாவிட்டாலும், அவரின் செலவு தொகையில் பாதியையாவது செலவு செய்கின்ற ஒருவரைத்தான் கட்சிகள் நிறுத்தும். அந்த வகையில் கரூர் தொகுதி மக்களுக்கு ஜாக்பாட்தான் என்கிறார்கள் அரசியல் ஆர்வலர்கள்.

## கோபி

கோபிசெட்டிப்பாளயத்தின் தற்போதைய சட்டமன்ற உறுப்பினர் கே.ஏ.செங்கோட்டையன். 9 முறை எம்எல்ஏவாக தேர்ந்தெடுக்கப்பட்டவர். முதல் முறையாக அதிமுக தொடங்கப்பட்டபோது 1977ல் சத்தியமங்கலத்திலிருந்தும், அதன் பிறகு 8 முறை கோபிச்செட்டிபாளையத்திலிருந்தும் தேர்ந்தெடுக்கப்பட்டார். அதிமுக ஜெயலலிதா அணி, ஜானகி அணி என பிரிந்திருந்தபோது ஜெயலலிதா அணி சார்பில் சேவல் சின்னத்தில் போட்டியிட்டு கோபிச்செட் டிபாளையத்தில் வென்றார். அதனாலே ஜெயலலிதாவின் நம்பிக்கைக்கு உரியவரானார்.



செங்கோட்டையன்

தமிழ்நாட்டின் பத்தாவது சட்டமன்றத்தில் வனத்துறை அமைச்சராகவும் போக்குவரத்துத் துறை அமைச்சராகவும் இருந்தார். தமிழ்நாட்டின் 14வது சட்டமன்றத்தில் விவசாயத் துறை அமைச்சராகவும், பின்னர் தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சராகவும், அதையடுத்து வருவாய்த் துறை அமைச்சராகவும் பணியாற்றி வந்தார்.

கொங்குநாடு மக்கள் முன்னேற்ற கழகம், காங்கிரஸ், திமுக என இவரும் பல்வேறு கட்சிகளின் வேட்பாளர்களை சந்தித்து அசைக்க முடியாத சக்தியாக வலம் வந்து கொண்டிருப்பவர். தொகுதியில் தனிப்பட்ட செல்வாக்கு மிக்கவர். ஜெயலலிதா உயிரோடு இருக்கும் பொழுது அவருடைய சுற்றுப்பயணத்தை முழுமையாக கையாண்டவர். தேர்தல் நுணுக்கங்கள் அத்துப்படி. ஆனால், இம்முறை விஜய் தலைமையிலான தமிழக வெற்றிக் கழகத்தின் சார்பில் களமிறங்க உள்ளார். இதுவரை அவருக்கு அடையாளமாகவும் உறுதுணையாகவும் இருந்த அதிமுக கட்சியும், இரட்டை இலை சின்னமும் இன்றி களமிறங்குகிறார். உண்மையில் செங்கோட்டையன் இம்முறைதான் சவாலான தேர்தலை சந்திக்கப்போகிறார் எனலாம். அவரை அவரது தொகுதியிலேயே வீழ்த்திக் காட்ட வேண்டும் என்ற வேகத்தில் இருக்கிறது அதிமுக தலைமை. ஆக, கோபியில் அனல் பறக்கப்போவது உறுதி.

## நாகப்பட்டினம்

சென்னை புதுக் கல்லூரி மாணவர் சங்கத் தலைவர் என தொடங்குகிறது தமிமுன் அன்சாரியின் அரசியல் வாழ்க்கை. மனிதநேய ஜனநாயகக் கட்சி என்ற புதிய கட்சியை, துவங்கி நடத்தி வருகிறார். தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தல், 2016ல் நாகப்பட்டினம் சட்டமன்றத் தொகுதியில் அதிமுக கூட்டணியில் மனிதநேய ஜனநாயகக் கட்சி சார்பாக போட்டியிட்டு வெற்றிபெற்றார். தொடர்ந்து அதிமுக பாஜக கூட்டணியை ஏற்றுக்கொள்ள முடியாத நிலையில் அந்த கூட்டணியில் இருந்து விலகி தற்போது மஜக தலைவராக, திமுக கூட்டணியை வலுப்படுத்துவதில் முக்கிய பங்காற்றி வருகிறார்.



தமிமுன் அன்சாரி

எல்லோரிடமும் இயல்பாக பழகும் தமிமுன் அன்சாரி எளிமையானவர். தமிழக நலனில் யாரெல்லாம் முக்கியத்துவம் கொடுக்கிறார்களோ மக்களும் அவர்களுக்கு முக்கியத்துவம் கொடுப்பார்கள் என்ற நம்பிக்கையில் திமுக சீட்டுகளை ஒதுக்கும் என்று கூறி வருகிறார். தேர்தல் நெருங்க நெருங்க கூட்டணி நெருக்கமும் அதிகரித்துள்ளது. கூட்டணி உறுதியானதும் சீட்டுகள் எத்தனை என்று தெரிய வரும்.

## சிவகாசி

அதிமுகவின் முன்னாள் அமைச்சரான ராஜேந்திர பாலாஜி சர்ச்சை நாயகன். மோடி எங்கள் டாடி எனப் பேசியதால் பெரும் சர்ச்சையில் சிக்கினார். சிவகாசிய சட்டமன்ற தொகுதி தொகுதியில் போட்டியிட்டு வெற்றி பெற்று அமைச்சராக வலம் வந்தவர் ராஜேந்திர பாலாஜி. பால்வளத்துறையில் அமைச்சராக இருந்த இவர் ஆவின் பாலில் கலப்படம் இருப்பதாக கூறி சர்ச்சையில் சிக்கியவர். அதிமுகவில் எதையும் வெளிப்படையாக பேசக்கூடியவர் என்று சொல்லப்பட்டாலும். பல்வேறு சர்ச்சையில் சிக்கி பிரபலமானவர் என்று இவரை சொல்லலாம்.



ராஜேந்திர பாலாஜி

இவர் கடந்த 2011 முதல் இந்த தொகுதியில் போட்டியிட்டு வருகிறார். கடந்த முறை ராஜபாளையம் சட்டமன்ற தொகுதியில் போட்டியிட்டார். இவரை எதிர்த்து போட்டியிட்ட தங்கபாண்டியன் 74,158 வாக்குகளைப் பெற்றார். ராஜேந்திர பாலாஜி 70,260 வாக்குகளைப் பெற்று தோல்வியை சந்தித்தார். இந்த தேர்தலில் மீண்டும் ராஜேந்திர பாலாஜி சிவகாசி தொகுதியில் களமிறங்குவார் என எதிர்பார்க்கப்படுகிறது. சிவகாசியில் மீண்டும் போட்டியிட்டால் ராஜேந்திர பாலாஜி வெற்றி பெறுவதற்கு அதிக வாய்ப்பு உள்ளதாக அதிமுகவினர் பேசிக்கொள்கிறார்கள்.

## காட்டுமன்னார்கோயில்

விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் பொதுச் செயலாளர் சிந்தனை செல்வன் கடந்த முறை நடைபெற்ற தேர்தலில் காட்டுமன்னார்கோயில் சட்டமன்ற தொகுதியில் போட்டியிட்டு வெற்றி பெற்றார். இதற்கு முன்னர் இதே தொகுதியில் திருமாவளவன், ரவிக்குமார் உள்ளிட்டோர் போட்டியிட்டு தோல்வி அடைந்துள்ளனர். திமுக கூட்டணி பலம் சிந்தனைச் செல்வனை வெற்றி பெற செய்தது எனலாம். கடந்த முறை நடைபெற்ற தேர்தலில் சிந்தனைச் செல்வன் 86,056 வாக்குகளை பெற்றார் அவரை எதிர்த்துப் போட்டியிட்ட அதிமுகவைச் சேர்ந்த முருகுமாறன் 75,491 வாக்குகளை பெற்று தோல்வியடைந்தார். விடுதலை சிறுத்தைகள் கட்சி திமுக கூட்டணியில் தொடர்வதால், மீண்டும் இதே தொகுதியில் சிந்தனைச் செல்வன் போட்டியிட வாய்ப்புள்ளது. சிந்தனைச் செல்வன் தனது செல்வாக்கை குறையாமல் பார்த்துக் கொண்டார் என்று தொகுதியைச் சேர்ந்த அரசியல் ஆர்வலர்கள் தெரிவிக்கிறார்கல். எனவே மீண்டும் அவருக்கு போட்டியிடும் வாய்ப்பு கிடைக்கும் என்ற தெரிகிறது.



சிந்தனை செல்வன்

## காட்பாடி

திமுகவின் முன்னோடிகளில் ஒருவரும் மூத்த அரசியல்வாதியும் அமைச்சருமான துரைமுருகன் தொகுதி காட்பாடி. இங்கிருந்து 8 முறை தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். 1996 முதல் 6 முறை தொடர்ச்சியாக தேர்வு செய்யப்பட்டுள்ளார். ஆனால் கடந்த முறை அதிமுக வேட்பாளர் வி.ராமுவை வெறும் 746 வாக்கு வித்தியாசத்தில்தான் வென்றார். துரைமுருகனின் செல்வாக்குக்கு முன்னாள் அதிமுக வேட்பாளர் ராமு ஒரு பொருட்டே அல்ல. ஆனாலும், குறைந்த வாக்கு வித்தியாசத்தில்தான் துரைமுருகனால் வெற்றிபெற முடிந்தது. எனவே, இந்த முறை, துரைமுருகனை வீழ்த்திவிட முடியும் என நினைக்கிறது அதிமுக. எனவே, சரியான வேட்பாளரை தேடி வருகிறது அதிமுக.



துரைமுருகன்



# கோவையில் 3 தொகுதிகள் கேட்கும் பாஜக

அதிமுகவின் கோட்டையென வர்ணிக்கப்படும் கொங்கு மண்டல தலைநகரான கோவையில் உள்ள 10 தொகுதிகளில் இந்த முறை அதிக தொகுதிகளை கேட்டு பெற்று அதில் எப்படியாவது அதிமுக வாக்குகளை வைத்து வெற்றியும் பெற்றுவிட வேண்டும் என எண்ணி பாஜக கடும் முயற்சி மேற்கொண்டு வருகிறது.

ஏற்கனவே கடந்த 2021 ஆம் ஆண்டு நடந்து முடிந்த சட்டமன்ற தேர்தலில் கோவை மாவட்டத்தில் உள்ள 10 தொகுதிகளில் கூட்டணி கட்சியான பாஜகவிற்கு அதிமுக ஒரே ஒரு தொகுதியை ஒதுக்கீடு செய்திருந்தது. அப்போது கோவை வடக்கு அல்லது கிணத்துக்கடவு என ஏதாவது ஒரு தொகுதியை எடுத்துக் கொள்ளுமாறு அதிமுக கூறிய நிலையில், பாஜகவின் மகளிர் அணி தேசிய தலைவராக உள்ள வானதி சீனிவாசன் தனக்கு தெற்கு தொகுதிதான் வேண்டும் என மல்லுக்கட்டி பெற்று அதிமுக உதவியுடன் வெற்றி பெற்று தற்போது சட்டமன்ற உறுப்பினராகவும் உள்ளார்.

### தொகுதி மாறும் வானதி?

அதேவேளையில் ஏற்கனவே கடந்த 2016ம் ஆண்டு சட்டமன்ற தேர்தலில் கோவை தெற்கு தொகுதியில் வெற்றி பெற்றிருந்த அதிமுக மாநகர் மாவட்ட செயலாளர் அம்மன் அர்ஜுனன் கோவை வடக்கு தொகுதியில் போட்டியிட்டு வெற்றி பெற்றார். தற்போது வானதி சீனிவாசன் தனக்கு தெற்கு தொகுதி வேண்டாம் வடக்கு தொகுதி தான் வேண்டும் என அதிமுக தலைமையிடம் அடம் பிடித்து வருவதாக கூறப்படுகிறது.

மேலும் எப்படியும் வடக்கு தொகுதி தனக்கு கிடைத்துவிடும் என்ற உறுதிப்பாட்டில் கடந்த 2 மாதத்திற்கும் மேலாக தொகுதியில் தனது மகளிர் அணி நிர்வாகிகள் மற்றும் ஆதரவாளர்களைக் கொண்டு தேர்தல் பணிகளையும் துவக்கியுள்ளார் வானதி சீனிவாசன்.

இதற்கிடையே அதிமுகவிலிருந்து தனிப்பட்ட காரணங்களுக்காக விலகுவதாக அறிவித்து அமைதி காத்து வந்த, கோவை வடக்கு சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட வடவள்ளி பகுதியைச் சேர்ந்தவரும் முன்னாள் அமைச்சர் எஸ்.பி. வேலுமணியின் நெருங்கிய சகாவுமான வடவள்ளி இன்ஜினியர் சந்திரசேகர் கடந்த மாதம் மீண்டும் வேலுமணியை சந்தித்து அதிமுகவில் தன்னை இணைத்துக் கொண்டார்.

அதிமுக சார்பில் கோவை வடக்கு தொகுதி வேட்பாளராக இன்ஜினியர் சந்திரசேகர் களமிறக்கப்பட உள்ளதாகவும் இந்த உடன்படிக்கைக்கு பிறகே அவர் அதிமுகவில் மீண்டும் தன்னை இணைத்துக் கொண்டதாகவும் அவரது ஆதரவாளர்கள் தெரிவித்து வருகின்றனர். கோவை வடக்கு தொகுதி வேட்பாளர் யார் என்பதில், அதிமுகவின் சந்திரசேகர் மற்றும் பாஜகவின் வானதி சீனிவாசன் இடையே கடும் போட்டி நிலவி வருகிறது.

எப்படியோ தனக்கு மீண்டும் கோவை தெற்கு தொகுதி கிடைத்தால் மகிழ்ச்சிதான் என்ற அடிப்படையில் நிம்மதியோடு வலம் வருகிறார் கோவை வடக்கு தொகுதியின் தற்போதைய சட்டமன்ற உறுப்பினரான அம்மன் அர்ஜுனன்.

ஆனால் அம்மன் அர்ஜுனனுக்கு 2 முறை தேர்தலில் போட்டியிட வாய்ப்பு வழங்கப்பட்டதால் இந்த முறை அந்த வாய்ப்பை வேறு யாருக்காவது வழங்கலாம் என அதிமுகவினரே கூறி வருகின்றனர். மேலும் கோவை தெற்கு தொகுதியை மீண்டும் பாஜகவிற்கு வழங்கி அங்கு வானதி சீனிவாசன் போட்டியிடும் பட்சத்தில் கோவை வடக்கு தொகுதியில் வடவள்ளி இன்ஜினியர் சந்திரசேகருக்கு வாய்ப்பு வழங்கினால் 2 தொகுதிகளிலும் அதிமுக கூட்டணி வெல்லும் என அரசியல் கணிப்பாளர்கள் கூறுகின்றனர்.



வ.ம.சண்முகசுந்தரம்



வடவள்ளி சந்திரசேகர்



வானதி சீனிவாசன்



அம்மன் கே.அர்ஜூனன்



மருதமலை சேனாதிபதி



மீனா லோகு

இதேபோன்று, திமுகவிலும் கோவை வடக்கு தொகுதி வேட்பாளர் தேர்வு கடுமையாகவே இருக்கிறது. அத்தொகுதியில் கடந்த முறை போட்டியிட்டு தோல்வியை தழுவிய வடவள்ளி பேரூராட்சியின் முன்னாள் தலைவரான வ.ம.சண்முகசுந்தரம் போட்டியிடுவார் என கூறப்படுகிறது.

ஆனால் கோவை கிழக்கு மாவட்ட முன்னாள் திமுக செயலாளராக இருந்த மருதமலை சேனாதிபதி தனக்கு போட்டியிட திமுக தலைமை வாய்ப்பளிக்கும் பட்சத்தில் தொகுதியில் 50 கோடி ரூபாய் வரை செலவு செய்ய தயாராக இருப்பதாக தலைமைக்கு தூது அனுப்பியுள்ளதாகவும் கூறப்படுகிறது.

அதே வேளையில் வடக்கு தொகுதியில் வேட்பாளராக களமிறங்க வேண்டும் என்ற முனைப்பில், கோவை மாநகராட்சியின் மத்திய மண்டல தலைவராக உள்ளவரும் 5 முறை திமுக சார்பில் மாமன்ற உறுப்பினராக வெற்றி பெற்றவருமான மீனா லோகு போராடி வருகிறார்.

எப்படி இருப்பினும் சட்டமன்றத் தேர்தல் சமயத்தில் கோவை வடக்கு தொகுதியில் எந்த வேட்பாளர் போட்டியிட்டாலும் பணப்புழக்கத்திற்கு பஞ்சம் இருக்காது என கூறப்படுகிறது. இதற்கு காரணம் கடந்த உள்ளாட்சி தேர்தல் சமயத்தில் மாநகராட்சியின் 38வது வார்டில் போட்டியிட்ட இன்ஜினியர் சந்திரசேகரின் மனைவியான ஷர்மிளா சந்திரசேகர் மற்றும் அவரை எதிர்த்து போட்டியிட்ட வ.ம.சண்முகசுந்தரத்தின் மனைவியான அமிர்தவள்ளி இடையே கடுமையான போட்டி நிலவியது. அப்போதே ஒரு சில பகுதிகளில் இரு தரப்பினரும் மாறி மாறி ஆயிரக்கணக்கில் வாக்காளர்களுக்கு பணம் கொடுத்தனர். ஒரு சிலர் ஒரு ஓட்டிற்கு ஐந்தாயிரம், ஆறாயிரம் வரை பெற்றதால் இந்த முறையும் அதே போட்டி இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. எனவே கோவை வடக்கு தொகுதி மிகவும் எதிர்பார்ப்புக்களுடன் கூடிய தொகுதியாகவும் மாறி உள்ளது.

**அருண் சங்கீத்**, கோவை



# பரந்தூரில் விமான நிலையம் அமைந்தால்

# சென்னைக்கு வெள்ள ஆபத்து..!

நீர் நிலைகள் பாதுகாப்பு, வெள்ளத்தடுப்பு, சுற்றுச்சூழல் பேணல் உள்ளிட்ட பொதுநலன் சார்ந்த பிரச்சினைகளை நடுநிலைக் கண்ணோட்டத்துடன் ஆய்வு செய்து அறிக்கை சமர்ப்பித்து வருகிறது, உவகை ஆராய்ச்சி நிறுவனம்.

இந்த வகையில், பரந்தூரில் புதிதாக அமைக்கப்பட உள்ள விமான நிலையம் குறித்து, இந்த ஆராய்ச்சி நிறுவனம் ஆய்வு மேற்கொண்டு, கடந்த 27.01.26ம் தேதி அந்த ஆய்வறிக்கையை சென்னையில் வெளியிட்டது.

பல்வேறு துறை நிபுணர்கள் உதவியுடன், பரந்தூர் பகுதியின் நிலவியல் அமைப்பு, நீரியல் மற்றும் சுற்றுச்சூழல் நிலவரம் உள்ளிட்ட அம்சங்கள் விரிவாக ஆய்வு செய்யப்பட்டுள்ள விவரத்தைத் தெரிவித்து, இந்த ஆராய்ச்சி நிறுவனத்தில் அங்கம் வகிக்கும் முனைவர் விதுபாலா, நீரியல் நிபுணர் உதய் ராஜன், டாக்டர் சந்திரகுப்தா, சமூக ஆர்வலர் சிரில் அலெக்சாண்டர் ஆகியோர் பத்திரிகையாளர்களுக்கு பேட்டி அளித்துள்ளனர்.

பரந்தூரில் விமான நிலையம் ஏன் கூடாது? என்பதற்கு அவர்கள் சுட்டிக் காட்டிய முக்கியக் காரணங்கள் வருமாறு:

விமான நிலையங்கள் கட்டுப்பாட்டு ஆணையம் (Airports Authority of India) வகுத்துள்ள விதிமுறைகள் படி 2 சர்வதேச விமான நிலையங்களுக்கு இடையே இருக்க வேண்டிய குறைந்தபட்ச வான்வழி தூரம் 150 கிலோமீட்டர் ஆகும். ஆனால், சென்னையில் ஏற்கெனவே செயல்படும் மீனம்பாக்கம் சர்வதேச விமான நிலையத்திற்கும் புதிதாக உருவாக உள்ள பரந்தூர் விமான நிலையத்திற்கும் இடைப்பட்ட வான்வழி தூரம் வெறும் 42 கிலோமீட்டர் மட்டுமே ஆகும்.

பரந்தூரில் தற்போது நடைபெற்று வரும் ஆயத்த ஏற்பாடுகள் அனைத்தும் தமிழ்நாடு தொழில் வளர்ச்சித் துறை நிறுவனம் (TIDCO) கொடுத்துள்ள முதல் கட்ட சாத்தியக்கூறுகளுக்கான அறிக்கையின் அடிப்படையிலேயே நடைபெற்று வருகிறது.

டிட்கோ ஆய்வில், இந்த நிலம் பாலாறு வடிநில பகுதியில் மட்டுமே உள்ளது என்று குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால், எங்கள் ஆய்வுப்படி இங்கு பாலாற்று வடிநிலத்தைக் காட்டிலும் கூவம் ஆற்று வடி நிலம் அதிக அளவில் உள்ளது.

நீரைக் கடத்தும் அளவு, கூவம் ஆற்றைப் பொறுத்தவரை வினாடிக்கு 35 ஆயிரம் கனஅடியாகும். கடந்த 2015ம் ஆண்டில், இந்த ஆற்றில் வினாடிக்கு ஒரு லட்சம் கனஅடி தண்ணீர் சென்றுள்ளது. இதே காலகட்டத்தில் அடையாறில் வினாடிக்கு ஒரு லட்சத்து 26 ஆயிரம் கனஅடி

தண்ணீர் சென்றுள்ளது. இது அதன் நீரை கடத்தும் அளவை விட சுமார் இரண்டு மடங்கு அதிகமாகும்.

செம்பரம்பாக்கம் ஏரியிலிருந்து அடையாற்றில் திடீரென திறந்து விடப்பட்ட தண்ணீர்தான் இதற்குக் காரணம் என்று கருதப்பட்டது. ஆனால் ஐஐடி மெட்ராஸ், ஐஐஎஸ்சி பெங்களூர் போன்ற உயர்கல்வி நிறுவனங்களைச் சேர்ந்த ஆய்வறிஞர்கள் நடத்திய ஆய்வில் செம்பரம்பாக்கம் ஏரியிலிருந்து வெறும் 20,000 கனஅடி தண்ணீர் மட்டுமே இந்த ஆற்றில் வந்ததையும் மற்ற தண்ணீர் பிற நீர்ப்பிடிப்பு பகுதிகளில் இருந்து வந்தவை என்றும் தெரியவந்தது.

அசாதாரணமாக மழை பெய்யும் காலங்களில் பரந்தூர் பகுதியிலிருந்து கம்பன் கால்வாய் வழியாக உபரிநீர் ஸ்ரீபெரும்புதூர் ஏரிக்கு வந்து அங்கிருந்து செம்பரம்பாக்கம் ஏரிக்கும், பின்னர் அடையாறுக்கும் வரக்கூடிய நிலை உள்ளது. இதையும் டிட்கோ ஆய்வு அறிக்கை தெரிவிக்கவில்லை.

இப்பகுதியில் இயற்கையான ஈர நிலங்கள் எதுவும் இல்லை என்றும் டிட்கோ ஆய்வு கூறுகிறது. அதுவும் தவறான தகவல். மேலும், இந்தப் பகுதியில் நெல்வாய் ஏரி மட்டும் இருப்பதாகவும் அந்த ஏரியை ஆழப்படுத்தி பரந்தூர் பகுதியில் இருந்து வரும் தண்ணீரை சேமித்து வைக்கலாம் என்றும் அந்த அறிக்கை தெரிவிக்கிறது. எங்கள் ஆய்வின்படி, அந்த இடத்தில் 20 சதவீதம் மட்டுமே நெல்வாய் ஏரி அமைந்துள்ளது. 80 சதவீதம் பிற நீர்நிலைகள் உள்ளன.

2015ல் அடையாற்றில் ஏற்பட்ட வெள்ளம் மீனம்பாக்கம் விமான நிலையத்தைப் பாதித்ததைப் பார்த்தோம். பரந்தூரில் விமான நிலையம் அமையும்போது, அங்குள்ள ஏராளமான நீர் நிலைகள் மூடப்படும், நீர்நிலை வழிகள் திருப்பி விடப்படும். பரந்தூரை சுற்றியுள்ள பகுதிகளில் நகரமயம் அதிகமாகும். மூன்று போகம் விவசாயம் நடைபெற்று வந்த அந்தப் பகுதி காங்கிரீட் தளங்களாக மாறும்.

இவற்றின் விளைவாக, பெருமழை காலங்களில் அதிக தண்ணீர் சென்னைக்குள் வரும் அபாயம் உள்ளது. அது மட்டுமல்ல, இதன் எதிர்வினையாக சென்னை மக்களுக்கு




தேவையான குடி தண்ணீருக்கும் பஞ்சம் வரும், நிலத்தடி நீரும் குறையும்.

பரந்தூரில் வாழ்வாதாரம் பாதிக்கப்படக்கூடிய 13 விவசாய கிராம மக்கள் தொடர்ந்து போராடி வருகின்றனர். அப்பகுதி குறித்த மேலும் விரிவான ஆய்வுக்காக 2023 பிப்ரவரி மாதத்தில் மச்சேந்திர நாதன் ஐஏஎஸ் தலைமையில் ஓர் குழுவை தமிழக அரசு நியமித்து அவர்களிடமிருந்து விரிவான ஆய்வு அறிக்கையை கோரியது. அவர்கள் ஆய்வு செய்து தயாரித்த அறிக்கை தயாராக உள்ளது. அந்த அறிக்கையைத் தமிழக அரசு வெளியிட வேண்டும்.

நீர்நிலைகள் அரசின் சொத்துகள் அல்ல. அதற்கு அவர்கள் பாதுகாவலர்கள் மட்டுமே. எனவே அவற்றைப் பாதுகாத்து பராமரிப்பது அரசின் கடமையாகும். பரந்தூரில் உள்ள 37 நீர்நிலைகளை மூடவும் நீர் வழித்தடத்தை திருப்பி விடவும் முடிவு செய்யப்பட்டுள்ளது. இது அரசமைப்பு விதிமுறைகளுக்கும் நீதிமன்ற தீர்ப்புகளுக்கும் முரணானது ஆகும்.

நாட்டின் வளர்ச்சிப் பணிகள் அவசியமானவை. அவை, நீர்நிலைகள் அழிக்கப்படாமல் சுற்றுச்சூழல் பேணப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். பரந்தூரில் இது சாத்தியம் ஆகாது.

எனவே, இத்திட்டத்திற்கு மேலும் அனுமதிகள் வழங்காமல் நிலப் பயன்பாடு மாற்றத்தையும் உடனடியாக நிறுத்த வேண்டும். மாற்றுத் திட்டம் குறித்து யோசிக்க வேண்டும்.


பரந்தூர் அருகில் உள்ள மீனம்பாக்கம் சர்வதேச விமான நிலையம், திட்டமிட்டபடி இன்னும் முழுமையான மக்கள் பயன்பாட்டிற்கு வரவில்லை. அதை செயல்படுத்த வேண்டும். அதற்கானப் பணிகளைத் தீவிரப்படுத்த வேண்டும். இவ்வாறு அந்த ஆய்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மனைவி, கணவன், குழந்தையை அடித்துக் கொன்ற அரக்கர்கள்









## சென்னையை உலுக்கிய கொடூரம்

சென்னை அடையார் இந்திரா நகர் பகுதியில் ஜன.26ம் தேதி காலை சாலையில் ஒரு சாக்கு முட்டையில் இருந்து ரத்தம் வடிவதாக அடையார் காவல் நிலையத்திற்கு அப்பகுதி மக்கள் தகவல் தெரிவித்தனர்.

தகவல் அறிந்த அடையார் காவல் ஆய்வாளர் இளங்கனி உள்ளிட்ட போலீஸார் சம்பவ இடத்திற்கு சென்று சாக்கு முட்டையை பிரித்துப் பார்த்தபோது வட மாநிலத்தைச் சேர்ந்த சுமார் 30 வயதுடைய நபர் உடல் இருப்பது தெரியவந்தது. பின்னர் உடலை மீட்ட அடையார் போலீஸார், உடற்கூறு ஆய்வுக்காக சென்னை ராயப்பேட்டை அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். தொடர்ந்து விசாரணை மேற்கொண்டனர்.

6 தனிப்படைகள் அமைக்கப்பட்டன. முதற்கட்டமாக அப்பகுதியில் இருந்த சிசிடிவி கேமரா பதிவுகளை ஆய்வு செய்தனர். அப்போது பைக்கில் வந்த இருவர் சாக்கு மூட்டையை போட்டுச் சென்றது தெரியவந்தது.

தொடர்ந்துவிசாரணையைதீவிரப்படுத்தியதில், சென்னை கோட்டூர்புரம் சென்ட்ரல் பாலிடெக்னிக் கல்லூரி காவலாளிகளான பீகாரைச் சேர்ந்த சத்தியேந்திரன்(32) மற்றும் லலித்(40) இவர்களது நண்பர்களான விகாஸ்(23), சிக்கந்தர்(33), நரேந்திர குமார்(45), ரவீந்திரநாத் தாகூர்(45)

உள்ளிட்ட 9 பேரை சந்தேகத்தின் அடிப்படையில் பிடித்து விசாரணை மேற்கொண்டனர். விசாரணையில் பல திடுக்கிடும் தகவல்கள் வெளியாகின.

லலித்திடம் அவரது சொந்த ஊரைச் சேர்ந்த நண்பரான கௌரவ் குமார் சென்னையில் வேலை வாங்கித் தருமாறு கேட்டுக் கொண்டுள்ளார். செக்யூரிட்டி வேலை இருப்பதாக கூறி அவரை லலித் சென்னைக்கு அழைத்துள்ளார். இதைத் தொடர்ந்து கடந்த 24ம் தேதி சென்னைக்கு மனைவி, 2 வயது மகனுடன் கௌரவ் குமார் வந்துள்ளார்.

லலித் அவரது நண்பரான சத்தியேந்திரனை அடையார் கஸ்தூரிபாய் ரயில் நிலையத்திற்கு அனுப்பி, கௌரவ் குமார் மற்றும் அவரது குடும்பத்தை அழைத்து வரும்படி கூறியுள்ளார்.





**சென்னையின் மையப்பகுதியில், பீகாரைச் சேர்ந்த கணவன், மனைவி மற்றும் 2 வயது குழந்தையை கொடூரமாக கொலை செய்த, அதே மாநிலத்தைச் சேர்ந்த 3 பேரை போலீஸார் கைது செய்தனர். மிக நீண்ட தேடுதலுக்கு பிறகு உடல்களை மீட்டனர்.**

அதன்படி சத்தியேந்திரன் கௌரவ் குமார் குடும்பத்தை அழைத்துக் கொண்டு, தரமணி பகுதியில் உள்ள 2 அடுக்குமாடி குடியிருப்புகளுக்கு சென்று அங்குள்ள அவர்களது நண்பர்களிடம் காவலாளி வேலை உள்ளதா? என கேட்டுள்ளார்.

அங்கு வேலை எதுவும் இல்லாத நிலையில் நாளை வேலை தேடிக் கொள்ளலாம் என கூறி, சத்தியேந்திரன் மற்றும் லலித் வேலை செய்யும் சென்ட்ரல் பாலிடெக்னிக் கல்லூரிக்கு கௌரவ் குமார் குடும்பத்தை அழைத்துச் சென்றுள்ளார். இரவு நேரம் என்பதால் மூவருக்கும் உணவு வாங்கி வருவதாக கூறிவிட்டு சத்தியேந்திரன் அங்கிருந்து புறப்பட்டு சென்றுள்ளார்.

பகல், இரவு என 2 இடங்களில் காவலாளி பணி செய்யும் சத்தியேந்திரன் சென்ட்ரல் பாலிடெக்னிக் கல்லூரியிலேயே தங்கி வந்துள்ளார். 24ம் தேதி இரவு வேளச்சேரியில் உள்ள ஐடி நிறுவனத்தில் காவலாளி பணிக்கு சென்று அங்கு வருகைப்பதிவு மட்டும் போட்டுவிட்டு அங்குள்ள காவலாளியை மாற்றிவிட்டு மீண்டும் சென்ட்ரல் பாலிடெக்னிக் கல்லூரிக்கு திரும்பி உள்ளார் சத்தியேந்திரன்.

இந்நிலையில், சென்ட்ரல் பாலிடெக்னிக் கல்லூரியில் சத்தியேந்திரன், லலித், விகாஸ், கௌரவ் குமார் ஆகிய 4 பேரும் மது அருந்தியுள்ளனர். மதுபோதையில் கௌரவ் குமாரின் மனைவி மீது ஆசைப்பட்ட சத்தியேந்திரன் அவரிடம் முறைதவறி நடக்க முயன்றுள்ளார்.

அதற்கு அந்த பெண் எதிர்ப்பு தெரிவிக்க, அந்த பெண்ணை அடித்திருக்கிறார் சத்தியேந்திரன். மது போதையில் இருந்த கௌரவ குமார்,

சத்தியேந்திரனை தடுக்க முயன்றார். அப்போது அவரை மூவரும் சேர்ந்து அடித்து மனைவி கண் முன்னேயே கொடூரமாக கொலை செய்துள்ளனர்.

பின்னர் சத்தியேந்திரன் அந்த பெண்ணை தனது இச்சைக்கு இணங்குமாறு வற்புறுத்தியுள்ளார். அந்த பெண் மேலும் மறுத்ததால் அவர்களது 2 வயது ஆண் குழந்தையின் காலை பிடித்து சுவற்றில் அடித்து கொடூரமாக கொலை செய்திருக்கிறார்கள்.

அந்த பெண்ணை வெளியில் விட்டால் கணவனையும், குழந்தையும் கொலை செய்ததை போலீஸில் சொல்லிவிடுவாள் என்று எண்ணி அவரையும் கொலை செய்திருக்கிறார்கள்.

பீகார் மாநிலத்தைச் சேர்ந்த கணவன், மனைவி அவர்களது 2 வயது ஆண் குழந்தை என ஒரு குடும்பத்தையே அதே மாநிலத்தைச் சேர்ந்த 3 பேரும் சேர்ந்து கொடூரமாக கொலை செய்திருக்கிறார்கள்.

பின்னர் கொல்லப்பட்டவர்களின் ஆடைகளையும், அவர்கள் கொண்டு வந்த ஆடைகளையும் கல்லூரி வளாகத்திலேயே தீ வைத்து எரித்து தடயங்களை அழித்துள்ளனர். 24ம் தேதி மூவரையும் கொலை செய்த நிலையில், விடியற்காலை சுமார் 4:30 மணியளவில் குழந்தையின் உடலை சென்னை மத்திய கைலாஷ் அருகே பக்கிங்ஹாம் கால்வாயில் வீசி உள்ளனர்.

அதேபோல் பெண்ணின் உடலை சாக்கு முட்டையில் கட்டி தரமணி காவல் நிலையம் அருகே உள்ள தனியார் பிரெட் கம்பெனி வாசலில் உள்ள குப்பைத் தொட்டியில் வீசி உள்ளனர்.

நேரம் அதிகமானதால் 24ம் தேதி இரவு கொலை செய்யப்பட்ட கௌரவ் குமார் உடலை 25ம் தேதி முழுவதும் சென்ட்ரல் பாலிடெக்னிக் கல்லூரியிலேயே வைத்துவிட்டு, 25ம் தேதி நள்ளிரவுக்கு பிறகு அதிகாலை வேளையில் கௌரவ் குமார் உடலை சாக்கு மூட்டையில் கட்டி அடையார் கூவம் ஆற்றில் வீசுவதற்காக எடுத்துச் சென்றுள்ளனர்.

அடையார் இந்திரா நகர் பகுதியில் வாகனத்தில் இருந்து சாக்கு மூட்டை வழுக்கி கீழே விழுந்துள்ளது. அந்த நேரத்தில் வேறு யாரேனும் பார்த்து விடுவார்கள் என்ற பயத்தில் அங்கிருந்து தப்பித்து சென்றுள்ளனர். மறுநாள் காலை வழக்கம்போல் அவரவர் வேலையை பார்க்க துவங்கியுள்ளனர்.

விசாரணையில் இந்த விவரங்களை அறிந்த போலீஸார், மத்திய கைலாஷ் அருகே கால்வாயில் இருந்து குழந்தையின் உடலை தேடி கண்டெடுத்தனர். தொடர்ந்து கடந்த 28ம் தேதி பெருங்குடி குப்பை கிடங்கில் பெண்ணின் உடலை தேடினர். 50க்கும் மேற்பட்ட பேலீஸார், சென்னை மாநகராட்சி ஒப்பந்த ஊழியர்கள் 25 பேர் என சுமார் 75 பேர் தீவிரமாக தேடினர். 28, 29, 30ம் தேதி என 3 நாட்கள் நடந்த தேடுதலுக்கு பிறகு கொல்லப்பட்ட பெண்ணின் உடலை கண்டெடுத்தனர்.

பின்னர் அந்த உடலை மீட்டு உடற்கூறு ஆய்வுக்காக சென்னை ராயப்பேட்டை அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்துள்ளனர்.

3 பேரையும் கொலை செய்த சத்தியேந்திரன், லலித், விகாஸ் ஆகிய 3 பேர் மீதும் வழக்கு பதிவு செய்த போலீஸார் 29ம் தேதி சைதாப்பேட்டை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி சிறையில் அடைத்தனர்.

உடற்கூறு ஆய்வு முடிந்த பிறகுதான், கொல்லப்பட்ட பெண் பாலில் வன்கொடுமைக்கு ஆளாக்கப்பட்டாரா என்பது தெரியவரும் என போலீஸார் கூறினர். தலைநகரின் மையப்பகுதியில் அரங்கேறியுள்ள இந்த கொலைச் சம்பவம் பொதுமக்கள் மத்தியில் பெரும் அதிர்ச்சியையும் அச்சத்தையும் இடங்களில் வீசிய சம்பவம் பொதுமக்கள் மத்தியில் பெரும் அதிர்ச்சியும் அச்சத்தையும் ஏற்படுத்தியது. தொடர் தேடுதல் நடத்தி கொல்லப்பட்ட 3 பேரின் உடல்களை மீட்டு, தடயங்களை சேகரித்து, சிறப்பாக புலன் விசாரணை செய்த போலீஸாரை அதிகாரிகள் பாராட்டினர்.

**வி.ஹர்ஷத்**

# அழிந்து வரும் கலப்பினம் இல்லா நாட்டு மாடுகள்



கலப்பினமில்லா நாட்டு மாடுகள் என்று அழைக்கப்படக்கூடியவை மலை மாடுகள் இனம். ஆனால், இவற்றின் மேய்ச்சலுக்கு வனத்துறையினர் கட்டுப்பாடுகள் விதிப்பதால் நாட்டு மாடுகள் அழிவின் விளிம்புக்கு தள்ளப்படுகின்றன.

தேனி மாவட்டம் போடிநாயக்கனூர் சுற்றுப்பகுதியில் உள்ள கரட்டுப்பட்டி, சூலப்புரம், பொட்டிபுரம், சங்கராபுரம், தம்மி நாயக்கன்பட்டி, திம்மி நாயக்கன்பட்டி, குண்டல் நாயக்கன்பட்டி உள்ளிட்ட சுற்றுப்பகுதிகளில் சுமார் 20,000க்கும் மேற்பட்ட நாட்டு மாடுகள் வளர்க்கப்பட்டு வருகிறது.

கலப்பினம் இல்லாத நாட்டு மாடு வகைகளை சார்ந்த இவை குறைந்த அளவே பால் தரக்கூடியவையாக இருந்ததால், பால்வள உற்பத்தியை அதிகரிக்கும் வகையில் அயல்நாட்டு கலப்பின மாடுகளான ஜெர்சி போன்ற பசு மாடுகள் வளர்க்கப்பட்டு வருகின்றன.

ஆனாலும் அவை நாட்டு மாடுகள் போன்று நோய் எதிர்ப்பு திறன் கொண்டவையாக இல்லை. அதே நேரத்தில் நாட்டு மாடுகள் நோய் எதிர்ப்பு திறன் கொண்டதாகவும் அவற்றின் பால், வெண்ணெய் மற்றும் நெய் போன்ற உணவுப் பொருட்கள் குழந்தைகள் முதல் பெரியவர் வரை அனைவருக்கும் ஆரோக்கியம் தரக்கூடியவையாக உள்ளன.

தமிழக மாவட்டங்களில் காங்கேயம், ஆம்பூர், அந்தியூர் மற்றும் ஒரு சில மாவட்டங்களிலும், தென் மாவட்டங்களில் தேனி, மதுரை, சிவகங்கை, ராமநாதபுரம், திண்டுக்கல் போன்ற மாவட்டங்களிலும் நாட்டு மாடுகள் அதிகளவில் வளர்க்கப்பட்டு வருகின்றன.

தற்போது விவசாய வளர்ச்சியில் நவீன இயந்திரங்கள் பயன்படுத்தப்பட்டாலும் பெரும்பாலான பகுதிகளில் இன்னும் பாரம்பரிய விவசாய நெறிமுறைகளில் நாட்டு மாடுகளே உழவுப் பணிகளில் அதிகம் பயன்படுத்தப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது. மேலும் தமிழர்களின் வீர விளையாட்டுகளான ஜல்லிக்கட்டு மற்றும் ரேக்ளா ரேஸ் மஞ்சுவிரட்டு போன்றவற்றில் நாட்டு மாடு வகைகளே அதிகளவில் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

கடந்த சில ஆண்டுகளுக்கு முன்பு ஜல்லிக்கட்டுக்கு தடை விதிக்கப்பட்டபோது, நாட்டு மாடுகள் இனம் அழிந்து விடுவதாக கூறி பல்வேறு போராட்டங்களை தமிழக மக்கள் கையில் எடுத்து ஜல்லிக்கட்டை மீட்டது குறிப்பிடத்தக்கது. இப்படி பல்வேறு சிறப்புகள் வாய்ந்த நாட்டு மாடு இனங்கள் தற்போது அழிந்து வருவது மிகவும் வேதனைக்குரியதாகும்.

**தேனி மாவட்டம்**

போடிநாயக்கனூரில் மேற்கு தொடர்ச்சி மலையடிவாரப் பகுதி மற்றும் மலைப் பகுதிகளில் மேய்ச்சலுக்காக நாட்டு மாடுகள் கொண்டு

செல்லப்படுகிறது. இந்நிலையில் வனத்துறையினர் மலைப் பகுதியில் மாடுகள் மேய்ப்பதற்கு கட்டுப்பாடுகள் விதித்துள்ளனர்.

உரிய அனுமதி பாஸ் பெற்று மாடுகளை மட்டுமே வனப்பகுதிக்குள் மேய்ச்சலுக்கு கொண்டு செல்ல வேண்டும் என்றும் பிறர் உள்ளே செல்லக் கூடாது என்றும் கட்டுப்பாடு விதித்துள்ளதால் இப்பகுதியில் நாட்டு மாடுகள் உணவின்றி தவிக்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

இதனால் விவசாயிகள் மட்டும் மாடு வளர்ப்பவர்கள் மிகப்பெரிய அளவில் பாதிக்கப்பட்டு பல்வேறு போராட்டங்களை கையில் எடுத்து வந்தனர். குறிப்பாக கடந்த சில மாதங்களுக்கு முன்பு நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான், போடி குரங்கணி மலைப் பகுதிகளில், நாட்டு மாடுகள் செல்ல தடைவிதிக்கப்பட்ட உத்தரவைக் கண்டித்து வீதி மேய்ச்சலுக்கு அவற்றை கொண்டு செல்லும் போராட்டத்தை நடத்தியிருந்தார்.

கடந்த ஓரிரு வாரங்களுக்கு முன்பு தேனி மாவட்டத்திற்கு சுற்றுப்பயணம் மேற்கொண்ட தமிழக பாரதிய ஜனதா கட்சி தலைவர் நயினார் நாகேந்திரன் நாட்டு மாடுகள் அதிகம் வளர்க்கப்படும் போடிநாயக்கனூர் அருகே உள்ள கரட்டுபட்டி கிராமத்தில் மரத்தடி திண்ணை கூட்டம் நடத்தி நாட்டு மாடுகளை வனப்பகுதிகளுக்குள் மேய்ச்சலுக்கு அழைத்துச் செல்ல உரிய நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்துச் சென்றார்.

தற்போது விவசாயம் அழிந்து குடியிருப்பு நிலங்கள் அதிகரித்து வரும் நிலையில், நாட்டு மாடுகள் போதிய உணவு குடிநீர் வசதி இல்லாமல் தவித்து வருகின்றன. தமிழக அரசு நாட்டு மாடுகளை பாதுகாத்து இனப்பெருக்கத்தை அதிகரிப்பதற்கு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று இப்பகுதியில் மாடு வளர்ப்போர் மற்றும் விவசாயிகள் கோரிக்கை விடுத்து வருகின்றனர்.

நாட்டு மாடுகளின் வாழ்வாதாரம் தமிழகத்தின் பாரம்பரிய வாழ்வாதாரத்துடன் இணைந்து உள்ளதால் நாட்டு மாடுகளின் இனப்பெருக்கத்தை அதிகரிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோரிக்கை அதிகரித்து வருகிறது.









**விஜய்**, போடி



# நீரிழிவு: வாழ்நாள் தண்டனையா? திரும்பச் சீராக்க முடியுமா?





## இது ஒரு உலகளாவிய சுகாதார நெருக்கடி

**இன்று உலகம் எதிர்கொண்டு வரும் மிகப்பெரிய சுகாதார சவால்களில் ஒன்றாக நீரிழிவு நோய் மாறியுள்ளது. சர்வதேச அளவில் 50 கோடிக்கும் அதிகமான மக்கள் நீரிழிவுடன் வாழ்கிறார்கள்; இவர்களில் பெரும்பாலானோர் Type 2 நீரிழிவால் பாதிக்கப்பட்டவர்கள். உலக சுகாதார அமைப்புகளின் கணிப்புப்படி, அடுத்த 10–15 ஆண்டுகளில் இந்த எண்ணிக்கை அபாயகரமான அளவில் உயரும். இது ஒரு மருத்துவப் பிரச்சினை மட்டுமல்ல; ஒரு சமூக, பொருளாதார மற்றும் உளவியல் சுமையாகவும் மாறியுள்ளது. இந்தியா இந்தப் பேரிடரின் மையமாக இருப்பது மிகவும் கவலைக்குரியது. நகர்ப்புறங்களில் மட்டும் அல்ல; கிராமப்புறங்களிலும் நீரிழிவு வேகமாகப் பரவி வருகிறது. தமிழகத்தில் நடுத்தர வயதிலேயே, சில நேரங்களில் 30–35 வயதிலேயே, நீரிழிவு கண்டறியப்படுவது இன்றைய நிஜம்.**

### இந்தியாவிலும் தமிழகத்திலும் – ஏன் இவ்வளவு அதிகம்?

உணவு பழக்கங்களில் ஏற்பட்ட திடீர் மாற்றம், பாரம்பரிய உடல் உழைப்பின் குறைவு, நீண்ட வேலை நேரம், மனஅழுத்தம், தூக்கமின்மை – இவை அனைத்தும் சேர்ந்து இன்சுலின் எதிர்ப்பை உருவாக்குகின்றன. இதன் விளைவாக, "pre-diabetes" நிலையில் இருப்பவர்கள் கூட அறியாமலேயே முழுமையான நீரிழிவை நோக்கி நகர்கிறார்கள். கவலைக்குரியது என்னவென்றால், இந்த நிலை பல ஆண்டுகள் கண்டறியப்படாமலேயே இருக்க முடியும். ஒருநாள் ஒரு ரிப்போர்ட்டில் சர்க்கரை அதிகம் என்று தெரிந்தவுடன், நோயாளியின் வாழ்க்கை திடீரென "நோயாளி" என்ற அடையாளத்திற்குள் சிக்கிக்கொள்கிறது.

நீரிழிவின் உண்மையான சுமை – உடலுக்கும் மனதுக்கும் நீரிழிவு நோயின் சுமை சர்க்கரை



மதிப்புகளோடு முடிவதில்லை. கண் பார்வை குறைவு, கால்களில் எரிச்சல் மற்றும் உணர்விழப்பு, சிறுநீரக பாதிப்பு, இதய நோய் – இவை அனைத்தும் மெதுவாக, ஆனால் உறுதியாக உருவாகும். அதே நேரத்தில், நோயாளியின் மனதில் ஒரு நிலையான பயம் உருவாகிறது: "எப்போது இன்சுலின் தொடங்க வேண்டுமோ?", "எதிர்காலத்தில் என்ன ஆகுமோ?" என்ற கேள்விகள். குடும்பத்தினருக்கும் இது ஒரு மன அழுத்தமாக மாறுகிறது. மருந்துகளின் எண்ணிக்கை அதிகரிக்கும்போது, நம்பிக்கை குறைவது இயல்பாகிறது.

**பழைய மருத்துவ அணுகுமுறை – ஏன் அது போதவில்லை?**


இன்றைய மருத்துவ முறை மிகுந்த அறிவியல் முன்னேற்றம் பெற்றிருந்தாலும், நீரிழிவில் ஒரு அடிப்படை குறைபாடு உள்ளது. அது சர்க்கரையை மட்டும் இலக்காகக் கொள்கிறது. fasting sugar, post-prandial sugar, HbA1c – இவை கட்டுப்பாட்டில் இருந்தால் நோய் "நன்றாக இருக்கிறது" என்று கருதப்படுகிறது. ஆனால் இன்சுலின் எதிர்ப்பு அதிகரிப்பது, உடலின் மெட்டபாலிக் அமைப்பு சிதைவடைவது குறித்து பெரிதாக கவனம் செலுத்தப்படுவதில்லை. இதனால் மருந்துகள் அதிகரிக்கின்றன; ஆனால் நோயின் அடிப்படை காரணம் அப்படியே தொடர்கிறது.

**நீரிழிவின் மையம் – இன்சுலின் எதிர்ப்பு**

ஜிஹ்ஜீமீ 2 நீரிழிவு என்பது இன்சுலின் குறைபாடு அல்ல; இன்சுலின் செயல்பட முடியாத நிலை. உடலில் இன்சுலின் அளவு அதிகமாக இருந்தும், செல்கள் அதை ஏற்க மறுக்கும் போது தான் பிரச்சினை உருவாகிறது. இதை fasting insulin, HOMA-IR போன்ற பரிசோதனைகள் ஆரம்பத்திலேயே காட்டிவிடும். Triglyceride & HDL ratio, C-peptide, hs-CRP போன்ற பரிசோதனைகள் உடலில் உள்ள மெட்டபாலிக் அழுத்தத்தையும் அழற்சியையும் வெளிப்படுத்துகின்றன. இந்த மதிப்புகள் சரியாகாமல், வெறும் சர்க்கரை குறைவது ஒரு தற்காலிக வெற்றியே.

**உணவு – தேவை புரிதல்... பயமல்ல...**

நீரிழிவு சீராக்கத்தில் உணவு என்பது பயமாக இருக்க வேண்டிய ஒன்றல்ல. "இதைச் சாப்பிடக் கூடாது, அதைத் தொடக்கூடாது" என்ற அணுகுமுறை நீண்ட காலம் செயல்படாது. உடலின்



இன்சுலின் தேவையை குறைக்கும் உணவு தான் இலக்கு. சுத்திகரிக்கப்பட்ட அரிசி, சர்க்கரை, மாவு உணவுகள், இனிப்பு பானங்கள் – இவை இன்சுலின் எதிர்ப்பை தீவிரப்படுத்துகின்றன. இதற்கு பதிலாக, பாரம்பரிய காய்கறிகள், புரதம் நிறைந்த உணவுகள், நல்ல கொழுப்புகள் உடலின் சமநிலையை மெதுவாக மீட்டெடுக்கின்றன. ஒவ்வொருவரின் உடலுக்கும் ஒரே மாதிரி உணவு பொருந்தாது; தனிப்பட்ட வழிகாட்டல் அவசியம்.

### உடல் இயக்கம் – மருந்தாக மாறும் இயக்கம்


உடற்பயிற்சி என்பது ஜிம்மில் மணி நேரங்கள் செலவிடுவதல்ல. உணவுக்குப் பிறகு 10–15 நிமிட நடை கூட இன்சுலின் எதிர்ப்பைக் குறைப்பதில் பெரும் பங்கு வகிக்கிறது. தசை பயிற்சி, வாரத்தில் சில நாட்கள் மட்டும் செய்தாலும், சர்க்கரையை இன்சுலின் இல்லாமலேயே செல்கள் பயன்படுத்த உதவுகிறது. நீண்ட நேரம் உட்கார்ந்திருக்கும் வாழ்க்கை முறையைச் சற்று மாற்றுவது கூட, பெரிய மாற்றத்தை உருவாக்க முடியும்.

### ஹோமியோபதி – ஏன் இது நீரிழிவு சீராக்கத்தில் தனித்துவமானது?

ஹோமியோபதி மருத்துவத்தின் முக்கிய தன்மை, நோயை மட்டும் அல்ல; நோயாளியை முழுமையாகப் பார்க்கும் அணுகுமுறை. நீரிழிவில் மனஅழுத்தம், தூக்கமின்மை, உணவு ஆசைகள், நீண்டநாள் சோர்வு – இவை அனைத்தும் நோயை தீவிரப்படுத்தும் காரணிகள். ஹோமியோபதி மருந்துகள் இந்த அடிப்படை சமநிலையின்மைகளை சீராக்க உதவுகின்றன. சர்க்கரையை வலுக்கட்டாயமாகக் குறைக்காமல், உடலின் ஒழுங்குபடுத்தும் அமைப்புகளை (regulatory systems) செயல்படச் செய்வதே இதன் நோக்கம். இதனால் நோயாளி உணவு மற்றும் வாழ்க்கை முறை மாற்றங்களை மன அழுத்தமின்றி தொடர முடிகிறது. இதுவே பல வெற்றிகரமான நீரிழிவு சீராக்கப் பயணங்களின் அடிப்படை.

### உண்மையான சீராக்கம் – எண்களைக் கடந்த மாற்றம்

பிதீகி1நீ குறைவது ஒரு நல்ல அறிகுறி தான்; ஆனால் அது முழு படம் அல்ல. fasting insulin குறைய வேண்டும், HOMA-IR மேம்பட வேண்டும், கல்லீரல் கொழுப்பு குறைய




வேண்டும், நோயாளியின் ஆற்றல் மற்றும் உற்சாகம் திரும்ப வேண்டும். இந்த முழுமையான மாற்றமே நீரிழிவு உண்மையில் பின்னடைவு அடைகிறது என்பதற்கான அடையாளம். பலரிடம் இது சாத்தியமாகியுள்ளது – சரியான புரிதலும் வழிகாட்டலும் இருந்தால்.

### “ஒத்துக்கொள்வதா, முயற்சி செய்வதா?”

நீரிழிவு உங்கள் வாழ்க்கையின் முடிவல்ல. அது உங்கள் அடையாளமாகவும் இருக்க வேண்டியதில்லை. “எனக்கு இதுதான் விதி” என்று ஒப்புக்கொள்வது எளிது; ஆனால் முயற்சி செய்வதே மாற்றத்தின் தொடக்கம். உலகம் முழுவதும், இந்தியாவிலும், பலர் இந்த நோயிலிருந்து மெதுவாக திரும்பி வருகிறார்கள். அது அதிசயம் அல்ல; உடலின் இயல்பை புரிந்துகொண்டதின் விளைவு.

ஒரு முயற்சி, ஒரு முடிவு, ஒரு புதிய அணுகுமுறை – இவை உங்கள் எதிர்காலத்தை மாற்றக்கூடும். மருந்துகளின் எண்ணிக்கையை மட்டுமல்ல, பயத்தையும் குறைக்க வேண்டும் என்ற ஆசை இருந்தால், இந்த பாதையை ஒரு முறை முயற்சி செய்து பாருங்கள். நீரிழிவு ஒரு நிரந்தர தண்டனை அல்ல; அது உங்கள் உடலை மீண்டும் புரிந்துகொள்ளும் ஒரு வாய்ப்பு.





# திருப்பரங்குன்றம் மலை தீபத்தூணில் தீபம் ஏற்றலாம்

## உயர்நீதிமன்றம் உத்தரவு; அரசை விளாசிய நீதிபதிகள்

திருப்பரங்குன்றம் மலையில் உள்ள தீபத் தூணில் கார்த்திகை தீபமேற்ற வேண்டுமென்ற தனி நீதிபதி உத்தரவை உறுதிசெய்து சென்னை உயர் நீதிமன்ற இரு நீதிபதிகள் அமர்வு தீர்ப்பளித்துள்ளது.

திருப்பரங்குன்றம் மலையில் உள்ள தீபத் தூணில் தீபம் ஏற்றவும், உச்சிப் பிள்ளையார் கோவில் தீப மண்டபத்தில் தீபம் ஏற்றுவது தொடர்பான அறிவிப்பை ரத்து செய்தும் உத்தரவிட வேண்டும் என்ற கோரிக்கையுடன் தொடரப்பட்ட வழக்கை சென்னை உயர் நீதிமன்ற மதுரை அமர்வில் நீதிபதி நி.ஸி.சுவாமிநாதன் விசாரித்தார்.

மனுதாரர்கள், தமிழ்நாடு அரசு, காவல்துறை, சிக்கந்தர் தர்கா நிர்வாகம், வக்ஃப் வாரியம், இந்திய தொல்லியல் துறை உள்ளிட்டோரின் வாதங்களை கேட்டறிந்த நீதிபதி, தர்கா அருகில் உள்ள தூணில் கார்த்திகை தீபம் ஏற்ற வேண்டுமென கடந்த டிசம்பர் ஒன்றாம் தேதி தீர்ப்பளித்தார்.

இந்த தீர்ப்பை எதிர்த்து தமிழ்நாடு அரசு தாக்கல் செய்த மேல்முறையீடு வழக்கை நீதிபதிகள் ஜி.ஜெயச்சந்திரன், கே.கே.ராமகிருஷ்ணன் அமர்வு விரிவாக விசாரித்து டிசம்பர் 18ஆம் தேதி தீர்ப்பை தள்ளிவைத்திருந்தது தொடர்பாக கடந்த இதழில் விரிவாக பார்த்திருந்தோம்.

இந்த மேல்முறையீடு வழக்கில் தீர்ப்பளித்த நீதிபதிகள், ‘திருப்பரங்குன்றம் மலையில் விளக்கு ஏற்றுவதற்கான வசதி கொண்ட அந்த கல்தூண் தான் தமிழில் தீபத் தூண் என அழைக்கப்படுகிறது;



அங்கு தீபம் ஏற்றுவது வழக்கத்தில் இல்லை என்பதுநிரூபிக்கப்படவில்லை;தேவஸ்தானத்தின் சொத்தாக அறிவிக்கப்பட்ட பகுதியிலேயே உள்ளது; ஆகவே வக்பு வாரியத்திற்கு அதன்மீது எந்த உரிமையும் இல்லை' என தெளிவுபடுத்தி உள்ளனர்.

'ஒரு ஆண்டின் குறிப்பிட்ட நாளில் தேவஸ்தானத்தின் பிரதிநிதிகளை மலை உச்சியில் உள்ள தூணில் விளக்கேற்ற அனுமதித்தால், பொது அமைதி பாதிக்கப்படும் என்ற அரசின் வாதம் நகைப்புக்குரியதும், நம்ப முடியாததும் ஆகும்' என்று விமர்சித்துள்ள நீதிபதிகள், 'தங்களின் அரசியல் நோக்கங்களை நிறைவேற்ற அரசு எத்தகைய நிலைக்கும் செல்லக்கூடாது' என அறிவுறுத்தி உள்ளனர்.

'மேலும், கார்த்திகை திருவிழாவின்போது உயரமான இடத்தில்தீபம் ஏற்றும் வழக்கமான இடம் தேவஸ்தானத்தின் சொத்து எல்லைக்குள்ளேயே இருக்கும்போது, பக்தர்களின் விருப்பத்தை நிறைவேற்ற மறுப்பதற்கு எந்த நியாயமான காரணமும் இல்லை' என்றும் கருத்து தெரிவித்துள்ளனர்.

'பொது அமைதிக்கு இடையூறு ஏற்படும் என மாவட்ட நிர்வாகம் வெளிப்படுத்திய அச்சம், அவர்களின் வசதிக்காகவும், ஒரு சமூகத்தை மற்றொரு சமூகத்திற்கு எதிராக நிறுத்துவதற்காகவும் உருவாக்கப்பட்ட கற்பனை பூதமே தவிர வேறில்லை' எனவும், 'அமைதியான பேச்சுவார்த்தை மூலம், இரு தரப்பினருக்கு இடையேயான இடைவெளியை குறைக்காமல், கடந்த ஆண்டுகளில் நடைபெற்ற அமைதி கூட்டங்கள் பிளவை மட்டுமே அதிகரித்துள்ளன' எனவும் அதிருப்தி தெரிவித்துள்ளனர்.



'தேவஸ்தானத்தினர் விளக்கேற்றுவதற்காக தூணுக்கு செல்லவும், பக்தர்கள் மலையடிவாரத்தில் இருந்து வழிபடவும் அனுமதிப்பது என்பது நிர்வகிக்க முடியாத ஒரு விஷயம் அல்ல' என்பதையும் அரசுக்கு விளக்கியுள்ளனர்.

இவற்றின் அடிப்படையில், தேவஸ்தானமே தீபத் தூணில் தீபம் ஏற்ற வேண்டும், தேவஸ்தான குழுவினர் தவிர பொதுமக்கள் அல்லது பக்தர்கள் எவரும் செல்ல அனுமதிக்கக்கூடாது, 1958 ஆம் ஆண்டு சட்டத்தின் கீழ் திருப்பரங்குன்றம் மலை பாதுகாக்கப்பட்ட பகுதியாக அறிவிக்கப்பட்டுள்ளதால் நினைவுச்சின்னங்களை பாதுகாக்கும் வகையில் இந்திய தொல்லியல் துறை தேவையான நிபந்தனைகளை விதிக்க வேண்டும், எத்தனை பேர் செல்லலாம் என்பது இந்திய தொல்லியல் துறை மற்றும் காவல் துறையுடன் தேவஸ்தானம் ஆலோசனை செய்து நிர்ணயிக்க வேண்டும், அனைத்தையும் மாவட்ட ஆட்சியர் ஒருங்கிணைத்து மேற்பார்வை செய்ய வேண்டும் என்ற உத்தரவுகளை பிறப்பித்து வழக்கை முடித்து வைத்தனர்.

இந்த உத்தரவுகளை வரும் காலங்களில் நடைமுறைப்படுத்தினால் சண்டை அல்லாமல், ஒளி மட்டுமே இருக்கும் என்றும் நம்பிக்கை தெரிவித்துள்ளனர்.

இதனிடையே, தீபம் ஏற்றும் விவகாரத்தில் இந்திய தொல்லியல் துறையினருடன் ஆலோசனை செய்யவும், அனுமதி பெறவும் வேண்டும் என்கிற 2 நீதிபதிகள் தீர்ப்பை எதிர்த்து, மதுரை அமர்வில் வழக்கு தாக்கல் செய்திருந்த இராம.இரவிக்குமார் தரப்பில் உச்சநீதிமன்றத்தில் மேல்முறையீடு மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**க.முகேஷ்**, சென்னை

# மலையையே பசுமையாக்க போராடும் போராளி



தனது மகனின் நினைவாக ஒரு மலையையே பசுமையாக்க தனிமனிதனாக போராடும் முனியசாமி என்ற ஒரு தந்தையின் போராட்டம் காண்போரை நெகிழச் செய்கிறது.

இன்றைய காலகட்டத்தில் ஒரு செடியை நட்டு அதை மரமாக்குவதே பெரிய விஷயமாக இருக்கும்போது, ஒரு மலையையே பசுமையாக்கப் போராடும் இந்தத் தந்தையின் உழைப்பு போற்றுதலுக்குரியது. மன அழுத்தத்தில் இருப்பவர்களுக்கு இயற்கையே சிறந்த மருந்து என்பதற்கும், தனிமனிதத் துயரத்தைச் சமூக நன்மையாக மாற்ற முடியும் என்பதற்கும் இவர் ஒரு வாழும் உதாரணம்.

“வெறும் படத்திற்கு போஸ் கொடுத்துவிட்டு செடி நடுபவரல்ல இவர்; வேர் வரை நீர் பாய்ச்சி வனம் காப்பவர்” எனத் தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தின் மாவட்ட செயலாளர் எல்.சி.மணி பாராட்டியுள்ளார்.

தனது சொந்தப் பணத்தை செலவிட்டு, நாள்தோறும் 5க்கும் மேற்பட்ட பணியாளர்களுடன் உழைக்கும் இவருக்குப் பல இடையூறுகள் உள்ளன. கால்நடைகளின் மேய்ச்சல் மற்றும் சமூக விரோதிகளால் ஏற்படும் தீ விபத்துகளில் இருந்து செடிகளை காக்க ‘கவசக் கூண்டுகள்’ அமைக்க நிதி உதவி தேவைப்படுகிறது. ஜேசிபி இயந்திரங்களைப் பயன்படுத்தவும், நிலத்தை மேம்படுத்தவும் வனத்துறை மற்றும் வருவாய்த்துறை முறையான அனுமதி வழங்கி ஒத்துழைக்க வேண்டும்.



ஒரு பெரும் நிறுவனம் அல்லது அரசாங்கமோ செய்ய வேண்டிய பணியை தனி ஒரு மனிதராக செய்து வரும் முனியசாமிக்கு தோள் கொடுப்பது நம் ஒவ்வொருவரின் கடமையாகும். தன் மகனின் நினைவாக அவர் நட்டுள்ள ஒவ்வொரு மரமும், எதிர்காலத் தலைமுறைக்கு ஆக்ஸிஜனைத் தருவதோடு மட்டுமல்லாமல், ஒரு தந்தையின் ஈடு இணையில்லாத பாசத்தையும் பறைசாற்றிக் கொண்டே இருக்கும்.

காஞ்சனகிரி மலை இன்று வெறும் ஆன்மீகத் தலம் மட்டுமல்ல, ஒரு தந்தையின் தீராத அன்பால் உருவான ‘பசுமை ஆலயம்’ என்கின்றனர் அப்பகுதி மக்கள்.

**ராஜீவ், இராணிப்பேட்டை**




# ஒருபுறம் கண்டன பொதுக் கூட்டம்; மறுபுறம் பாராட்டு விழா

## தொண்டி பேரூராட்சியில் அமர்க்களம்

தொண்டி பேரூராட்சியின் தலைவியாக கடுமையான போராட்டத்திற்கு பிறகு திமுகவை சேர்ந்த ஷாஜகான் பானு ஜவஹர் அலி கான் தேர்ந்தெடுக்கப்பட்டார். கடந்த நான்கரை ஆண்டுகளாக தலைவி பானுவின் மகன் நவ் பல் என்பவர்தான் நிர்வாகத்தை கவனித்து வந்தாக கூறப்படுகிறது.

இந்நிலையில் கடந்த மாதம் தொண்டி பாவோடி மைதானத்தில் பல ஆண்டுகளாக செயல்பட்டு வந்த ஆதார் சேவை மையம் கட்டிடம் இடிக்கப்பட்டு அதே இடத்தில் புதிய கட்டிடம் கட்டும் பணிகள் துவங்கப்பட்டது. அப்போது அந்த இடத்தில் கட்டிடம் கட்டக் கூடாது என சிலர் கடும் எதிர்ப்பு தெரிவித்தனர். மற்றொரு தரப்பினர் அந்த இடத்தில் தான் கட்டவேண்டும் என்று போராட துவங்கினர். பல்வேறு கட்ட பேச்சுவார்த்தையும் தோல்வியில் முடிந்தது. இதனால் கட்டிடம் கட்டும் பணி தற்காலிகமாக நிறுத்தப்பட்டது.

இதையடுத்து பேரூராட்சியின் செயல்பாட்டில் அதிருப்தி அடைந்தவர்கள் பேரூராட்சி நிர்வாகத்தில் தலைவியின் மகன் தலை யிடுவதை நிறுத்த கோரியும், ஊழல் பட்டியல், குறைபாடுகளையும் சமூக வலைதளங்களில் வெளியிட்டனர். இதனால் பிரச்சினை பெரிதானது. பேரூராட்சி தலைவரின் ஆதரவாளர்கள் தலைவரை பாராட்டி போஸ்டர் ஒட்டினர்.

கடந்த சில தினங்களுக்கு முன்பு தொண்டி ஐக்கிய ஜமாத் , இந்து மத பரிபாலன சபை மற்றும் பல்வேறு அரசியல் கட்சியினர் பேரூராட்சி நிர்வாகத்தை கண்டித்தும் தலைவரின் மகன் நிர்வாகத்தில் தலையிடுவதை நிறுத்த கோரியும் அரசின் கவனத்தை ஈர்க்க கண்டன பொதுக் கூட்டம் நடத்தினர்.

இதில் தலைவரின் மகன் பேரூராட்சி நிர்வாகத்தில் தலையிட்டால் வரும் சட்டமன்ற தேர்தலில் திமுக கூட்டணியை புறக்கணிப்போம் என தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அடுத்த நாளே அனைத்து சமுதாய கூட்டமைப்பு சார்பில் பேரூராட்சி தலைவரின் சாதனைகளை பாராட்டி பாராட்டு விழா நடத்தினர்.

நான்கரை வருடங்களாக என்ன செய்தனர்? தலைவர் மகன் தலையிட்டது தெரியாதா? என ஒரு தரப்பினரும், பொறுத்திருந்து பொருமை இழந்து விட்டோம் என மற்றொரு தரப்பினரும் கூறுகின்றனர்.

# America's Renewed Resource Hunt and the Rising Cost of Power Politics

By AV

The United States has always understood the strategic value of resources. Oil, minerals, shipping routes and energy corridors have shaped American foreign policy for more than a century. What has changed in recent years is not the objective, but the method.

Washington's latest pursuit of strategic resources, spanning South America, the Caribbean, North America and the Arctic, has taken on a sharper, more confrontational edge, blending economic pressure, trade coercion and, increasingly, direct intervention.

At the centre of this renewed push are four territories of immense strategic value: Venezuela, Cuba, Mexico and Greenland. Each offers a different prize; oil, critical minerals, geographic leverage, and together they form a resource arc that the current Trump administration appears determined to dominate.

What alarms allies and adversaries alike is not America's interest in these resources, but the manner in which that interest is now being asserted. From forceful intervention in Venezuela, to openly threatening other South American countries, and now, the pursuit of Greenland, the U.S. seems to be on a resource roll.

## Venezuela: oil wealth and geopolitical defiance

Venezuela remains one of the world's most resource-rich nations. It possesses the largest proven oil reserves on the planet, alongside substantial natural gas deposits and significant gold and mineral wealth. Despite years of economic collapse and sanctions, the country's energy potential has never disappeared. It has only been constrained. Over the past decade, Caracas leaned heavily on Russia and China to keep its economy afloat. China emerged as a major buyer of Venezuelan crude oil, often through complex barter arrangements and debt repayments.

Russia, meanwhile, invested in oil infrastructure and expanded military cooperation, embedding itself deeply in Venezuela's strategic calculus. These relationships did more than keep Venezuelan oil flowing; they challenged Washington's long-standing influence in the Western Hemisphere.

For the Trump administration, Venezuela came to represent both a resource prize and a geopolitical affront, a state sitting on vast energy reserves while openly aligning with America's principal rivals. The U.S. response has been increasingly direct. Sanctions escalated, diplomatic isolation intensified, and in early 2026, Washington crossed a threshold that many allies had feared: direct military intervention that removed President Nicolás Maduro from power.

The administration framed the move as a necessary step to restore stability and secure energy flows. After Trump openly claimed control over its resources, and proclaiming himself to be acting President of Venezuela, people saw it as a blunt demonstration of resource-driven interventionism and a reminder that sovereignty can become negotiable when strategic assets are involved.

## Cuba: minerals beneath the surface

Post his Venezuelan tryst, Trump has claimed that Cuba and Mexico may be facing the same kind of "intervention" very soon, which naturally makes one take a deeper note of resources available in these countries. So, Cuba, which rarely features in discussions of global resource competition, yet, is the island which holds substantial deposits of nickel and cobalt metals essential to modern industry and electric vehicle batteries, comes under global attention.

For years, Cuban nickel production has limped



along under the weight of underinvestment, sanctions and ageing infrastructure. Still, as demand for battery materials accelerates, even modest producers gain strategic relevance. Control over supply chains for cobalt and nickel is no longer a technical concern; it is a geopolitical one.

Washington's posture toward Havana has hardened alongside this realization. While official rhetoric continues to emphasis democracy and human rights, economic pressure on Cuba has intensified at precisely the moment when its mineral sector could attract alternative foreign partners. To many observers, the message is implicit: resource alignment comes with political conditions.

## Mexico: proximity and pressure

Mexico occupies a unique position in America's resource strategy. Unlike Venezuela or Cuba, it is not a distant theatre but a deeply integrated neighbor. Mexico remains a significant oil producer and a major source of silver and industrial minerals, even as its energy sector struggles with declining output and financial strain.

For Washington, Mexico's resources matter not only because of what lies beneath the ground, but because of geography. Energy security, manufacturing supply chains and migration dynamics are tightly intertwined. Any disruption in Mexico reverberates almost immediately across the U.S. economy. The Trump administration has increasingly blurred the line between partnership and pressure.


Trade threats, tariff warnings and public criticism of Mexican energy policy have become routine. While framed as efforts to "level the playing field," these tactics have strained a relationship that depends on trust as much as proximity. Mexican officials have responded cautiously, aware that resource cooperation under duress is rarely sustainable.

## Greenland: The Arctic prize

If Venezuela represents old energy, Greenland represents the future. Beneath its ice and rocky terrain lie rare earth elements, uranium and other critical minerals indispensable to renewable energy technologies, defense systems and advanced electronics. As climate change accelerates Arctic melt, Greenland's strategic value has surged.

The Trump administration's repeated interest in Greenland, including suggestions that the United States should acquire or exert control over the territory, stunned European allies. Denmark, which governs Greenland, rejected the notion outright. Greenlandic leaders, meanwhile, stressed their right to self-determination and warned against becoming pawns in great-power competition.

What unsettled the observers was not just the proposal itself, but the pressure that followed. Trade threats against European partners, tariff rhetoric, and blunt diplomatic messaging made it abundantly



clear that economic coercion was being used to force strategic concessions. In the Arctic, where cooperation has long been the norm, this marked a sharp departure.

### Tariffs as leverage, not policy


A defining feature of the current U.S. approach is the use of tariffs as a geopolitical weapon. Trade measures once reserved for economic disputes are now deployed to influence diplomatic positions and resource access. European allies have found themselves threatened with punitive tariffs for resisting American pressure, particularly in matters relating to Greenland.


This strategy, often described privately by diplomats as "tariff bullying", has produced mixed results at best. While short-term concessions are sometimes extracted, the long-term damage to alliances is significant. Trade coercion breeds resentment, not loyalty, and undermines the very partnerships required to build resilient, diversified supply chains.

At the Davos World Economic Forum in January 2026, the administration briefly softened its tone, announcing a framework that delayed certain tariffs. Yet the underlying message remained unchanged: cooperation is conditional, and resistance carries a price.

### Global reactions: unease and pushback

International responses have been swift and re-







vealing. European leaders, particularly in France and Germany, have warned that unilateral resource politics risk reviving colonial-era power dynamics. Denmark has reinforced its presence in Greenland, signalling that sovereignty is not up for negotiation.

China condemned U.S. actions in Venezuela and reiterated calls for respect for international law, while quietly adjusting its energy sourcing strategies. Russia, though constrained in its ability to respond directly, viewed the developments as a troubling precedent; one that exposes the vulnerability of states aligned against Washington.

Elsewhere, reactions have ranged from cautious support to outright alarm. Latin American governments worry about the precedent set by intervention. Human rights groups warn that resource-driven policies often sideline civilian welfare. Environmental advocates stress that rapid extraction, particularly in fragile Arctic ecosystems, could have irreversible consequences.

### The cost beyond geopolitics

Lost in many strategic discussions is the human and environmental toll of aggressive resource competition. In Greenland, indigenous communities have raised concerns about mining projects imposed without meaningful consultation. In Venezuela and Cuba, decades of extractive politics have already left deep social and ecological scars. When resource access becomes a zero-sum contest, local populations are often reduced to afterthoughts. Stability suffers, governance erodes, and long-term development gives way to short-term extraction.

### A need for restraint

America's interest in securing energy and critical minerals is neither new nor illegitimate. What is new is the willingness to pursue these goals through coercion, economic and military, and blatant bullying with absolute disregard for diplomatic fallout. Tariffs wielded as threats, allies pressured as adversaries, and resource-rich regions treated as strategic prizes rather than partners all carry consequences. They weaken trust, invite retaliation, and risk turning resource competition into a cycle of instability. A more durable approach exists: multilateral agreements, transparent investment, respect for sovereignty and shared governance of critical supply chains. These tools may be slower, but they are far more effective in the long run, as proven by time. The disruption and unrest now visible across multiple regions should serve as a warning. Resource security achieved through force and intimidation is fragile by nature. If left unchecked, it threatens not only global stability but the cooperative order required for a sustainable future. In a world already strained by climate change and economic uncertainty, restraint is not weakness. It is necessity!




# Greenland and the Struggle for the Arctic

By Vijayalakshmi Veeraiyan, Finland

Greenland which is the world's largest island, sparsely populated with roughly 57,000 residents yet geopolitically vital has become the center of an escalating international confrontation. Though it's an autonomous territory within the Kingdom of Denmark, it sits at the strategic crossroads of the Arctic and North Atlantic. Its geographic position which controls access through the GIUK gap (Greenland, Iceland, UK) has made it a military priority for centuries, particularly for the United States and NATO allies.

## Historical Roots of U.S. Interest

American interest in acquiring Greenland is not a new story. Earlier in the 19th century, U.S. Secretary of State William Seward, fresh from the purchase of Alaska (1867), also explored options for Greenland but they weren't successful.

In 1946, U.S. President Harry S. Truman offered Denmark $100 million to purchase the island, an offer Copenhagen rejected while allowing expanded U.S. military access during the early Cold War. This marked the beginning of formalized American interest that framed around security, Arctic defense, and access to strategic airspace.

Throughout the 20th century, Greenland remained under Danish control but strategic to U.S. Cold War defense planning. U.S. air and missile warning bases were established to monitor Soviet activity, most notably at Pituffik Space Base (formerly Thule Air Base).

## Renewed U.S. Efforts and Trump's Push (2025&2026)

Interest in Greenland re-entered the spotlight during Donald Trump's first presidency (2017&2021). In 2019, Trump publicly floated the idea of purchasing Greenland which marks as an offer but the proposal was firmly rejected by Denmark and met with doubt and criticism from countries around the world.

After returning to office in 2025, Trump made the acquisition of Greenland a central foreign policy objective, arguing that Greenland was essential for U.S. national security. He claimed Denmark could not adequately defend the Arctic territory against growing Russian and Chinese activities but his claim was strongly disputed by European allies.

In early January 2026, Trump reiterated his desire to secure Greenland, emphasizing that the United States "needs Greenland" and that Denmark might not be reliable enough to protect it. This led to high-level diplomatic engagements with Danish officials but without agreement, highlighting deep disagreement between Washington and Copenhagen.

## European Reaction: NATO, Diplomacy, and Military Presence

Denmark and Greenland have firmly rejected U.S. proposals, underscoring that Greenland is not for sale and reaffirming their right to self-determination within the Kingdom of Denmark. Greenland's leadership has stressed that the island's future must be decided by its people, not by external powers.

Many European nations including France, Germany, Norway, the United Kingdom, Sweden, the Netherlands, and Finland have mobilized






military planning staff and small troop rotations under Operation Arctic Endurance, a Danish-led initiative designed to strengthen Arctic defence and send a unified message of NATO solidarity.

This allied presence symbolically shows that military cooperation in the Arctic is a collective effort, not a prelude to territorial claims. Yet, Trump has framed such troop deployments as obstacles to his Greenland acquisition goals, mischaracterizing them as threats rather than coordinated defence measures.

Denmark itself has increased its defence footprint in Greenland, boosting personnel and participating in joint exercises with NATO allies to underscore that Greenland's defence is a shared responsibility and that is non-negotiable.

## Economic Pressure and Trade Escalation

Frustrated by this diplomatic resistance, Trump escalated the dispute by imposing tariffs on European allies that have supported Denmark's stance. Starting February 1, 2026, the U.S. enacted a 10% tariff on goods from Denmark, Norway, Sweden, France, Germany, the Netherlands, the UK, and Finland. These rates would rise to 25% by June if Greenland's sale is not agreed. This unprecedented economic pressure on NATO partners has widened the diplomatic rift and drawn condemnation from European leaders.

European Union leaders and NATO officials have responded sharply, calling the tariff strategy unacceptable and risking serious harm to transatlantic relations.

Russia has also commented on the issue, describing Denmark's control of Greenland as a leftover of colonial rule while saying it has no plans to get involved. However, some analysts believe these statements are meant to create division within NATO.

## Historical and Legal Barriers

Legally, Greenland is not a sovereign state .It is an autonomous territory within Denmark. Any transfer of sovereignty would require the consent of both Denmark and Greenland's government, something Greenland's leaders have repeatedly said will not happen.

The 1951 defence agreement between Denmark and the United States still allows U.S. military access, but it does not grant ownership or control rights which is a key legal distinction.

## Arctic Security and Geopolitics

The Greenland issue has elevated Arctic security to an unprecedented level of strategic competition, reframing the region as a zone of potential conflict rather than cooperative engagement. Many analysts now warn that this dispute could trigger a broader fracturing within NATO.

As of January 2026, there is no negotiated path forward for Greenland's transfer to the United States. Denmark, Greenland and European allies have consistently reaffirmed their opposition to any forced acquisition. Diplomatic channels remain open, but the aggressive and economic coercion tactics have strained relations, making compromise difficult.

## Role of Greenlanders

The people of Greenland themselves have voiced opposition to being sold to any external power. Opinion surveys have consistently shown resistance to joining the U.S., and local leaders emphasize that any discussion about sovereignty must involve Greenlanders directly.

## Continued Strategic Rivalries

Beyond this bilateral dispute, Arctic competition involves Russia and China as well. Even though they are not officially claiming Greenland, both countries remain active in Arctic diplomacy and trade, which adds to security concerns in the region.

## What This Means for the Future

The Greenland issue illustrates how historical strategic interests, modern geopolitical rivalries and international law and alliances intersect in complex ways. What began as longstanding American interest dating back to post-World War II has erupted into a diplomatic crisis involving tariffs, troop deployments, and sharp public statements. Denmark, Greenland, and their NATO allies have stood firm against relinquishing sovereignty, while the United States under President Trump has doubled down on demands for control, framing Greenland as indispensable to national security.


The future of Greenland's status remains uncertain. The ongoing diplomatic engagement, legal protections tied to sovereignty and international resistance all suggest that a peaceful, negotiated resolution is the most likely outcome, though tensions may continue to rise before that reality.

# Dr. Ganesh Homeo Clinic

Clinic for Advanced Homeopathy

## MULTI-SPECIALITY HOMEOPATHIC CLINIC

- ✓ CARING & EXPERIENCED HOMEOPATHIC PRACTITIONER
- ✓ HIGH-QUALITY, INTERNATIONAL MEDICINES
- ✓ COMPREHENSIVE, COMPASSIONATE CARE



**9894 999 243**

**CALL NOW**

**Dr. Ganesh Lakshmanan,** BHMS, MD(AM), PhD (Homeopathy), has over **20 years of clinical experience** in homeopathic practice.

His clinical approach integrates classical homeopathy with structured case evaluation and modern clinical understanding.

Our approach emphasizes identifying health patterns unique to each patient and supporting through safe and long-term wellness-focused homeopathic medicines.

## OUR CLINICAL FOCUS AREAS

- Diabetes & Thyroid
- Skin Disorders
- Women's Health
- Asthma & Allergy
- Joint & Spine Disorders
- Joint & Spine Disorders
- Digestive Disorders
- Child & Lifestyle-Allergy
- Child & Lifestyle-related Conditions

**Dr. Ganesh Lakshmanan**
**BHMS, MD (A.M), PhD**

#3A, Taramani Link Road, Bharathi
Near Arun Hospital, Taramani – 600113

**9894 999 243**

THAKKAAR KURAL, English & Tamil Monthly, PRGI Registration No: TNBIL/25/A2396






Published by S Esuf Basha, Printed Ali Mohamed Sayeed, Published at No.4, Pandiyan Street, Avvai Nagar, Thiruvanmiyur, Chennai - 600 041, Printed at J.M.Process No.29, V.N.Dass Road , Border Thottam, Mount Road, Chennai-600002, Editor. S.Esuf Basha